தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 23-8-58 | சனிக்கிழமை | இதழ் 10

தமிழன் தமிழன்தான்!

அன்புள்ள செந்தில்நாயகம்,

என்றுமே கடிதம் எழுதாத நான் இன்று எழுதுகின்றேனே என்று உனக்கு வியப்பாக இருக்கிறதா? எனக்கும்தான் வியப்பாக இருக்கிறது. உன்னைப் பற்றிப் பத்திரிகையிலே செய்தி வராமலிருந்தால் நான் எழுதவேண்டும் என்று எண்ணியிருக்கமாட்டேன். தாயகத்தை விட்டுத் தண்ணீருக்கப்பால் சென்றுவிட்ட உன்மீது எனக்கு கோபம்தான். என்னதான் பசியாக இருந்தாலும், பட்டினி கிடந்தாலும், பஞ்சம் வாட்டினாலும், ஒரு கவளம் சோற்றுக்காக நீ வேற்றாருக்குச் சென்றதை நினைந்து நினைந்து கண்ணீர் வடிக்காத நாளே கிடையாது. நீ பிரிந்த துன்பத்தைத் தாங்கிக்கொள்ள இயலாமல் நான் கண்ணீர் வடித்ததாக உன் மாமி நினைத்துக்கொண்டாள் போலிருக்கிறது. தெரிந்த பிள்ளைதானே, இதோ வந்துவிடும், இதற்கா கலங்குவது என்று சில வேளைகளில் எனக்கு ஆறுதல் கூறுகின்றாள். எனக்கு அந்தக் கவலை இல்லை. இருக்கமுடியாது என்பது உனக்குத்தான் தெரியுமே. திரைகடல் ஓடி திரவியம் தேட வேண்டியவர்கள் அதற்கா அழுவோம்? ஆனால் நான் அழுது அழுது புலம்பியது நீ கண்காணாத சீமைக்குச் சென்றுவிட்டாயே என்பதற்காக அல்ல. அந்தச் சீமைக்கு எப்படிப் போனாய் என்பதனை எண்ணி எண்ணித்தான் ஏங்குகின்றேன்.

நாம் பார்த்தோமோ இல்லையோ, நம்முடைய முன்னோர்கள் இன்று நீ வயிறு கழுவிக்கொண்டிருக்கிறாயே, அந்த மண்ணில் வாள்திறமை காட்டி வல்லமை உணர்த்தி வாகைமாலை சூட்டிக்கொண்டார்கள் என்று இலக்கியத்திலே எழுதிவைத்திருக்கிறது. கதை சொல்லும், புராண இலக்கியத்தில் அல்ல. கருத்து கலந்த உண்மையை எடுத்துரைத்திடும் உயிர்த்துடிப்புள்ள தமிழர் இலக்கியத்தில் அந்தச் செய்திகளை நீயும் பலமுறை கேட்டறிந்திருக்கின்றாய். அறிந்தும் நீ அந்த மண்ணில் வாழ வேண்டும் என்ற நிலை இருக்கிறதே என்பதுதான் என் கவலை.

வேந்தனாக உன்னுடைய முன்னோர்கள் அங்கே சென்றனர். நீ வேலை தேடி அங்கே சென்றிருக்கின்றாய்.

இந்த இரண்டு நிலைகளையும் எண்ணினால் போதும் எங்கிருந்துதான் வருமோ கண்ணீர், தலையணை ஈரமாகிறது.

ஆனால் மறுகணம் உண்மை நிலை என் அறிவுக்குப் புலனாகும். வடிந்த கண்ணீர் வற்றிப்போகும். நெஞ்சம் பொருமும். என்ன செய்வது? மன்னனாக என் முன்னோன் அங்கு சென்றான் நான் கூலியாக அங்கு செல்ல மாட்டேன் என்று நம்முடைய பரம்பரைச் சொத்து மானம் உன்னைத் தடுத்து நிறுத்தியிருந்தால் என்ன ஆகும், நிலைமை? வயிறு பசி பசி என்று ஓலமிடும். இந்தா புசி என்று சொல்லி இட இங்கே என்ன இருக்கிறது. நேற்றுகூட அந்தப் படிப்பகத்திலே படித்தேனே — ஆமாம் இப்போது செலவுக்குக் காணாமல் சிக்கனம் செய்யவேண்டும் என்ற நிலைமை வந்தது, சொந்தமாகப் பத்திரிகை வாங்குவதைத்தான் நிறுத்த முடிந்தது. அதனால்தான் படிப்பகத்திற்குப் போய் படித்து வருகின்றேன். எத்தனை செய்திகள்; அப்பப்ப! அரசியல் செய்திகளைவிட அந்தச் செய்திகள்தான் மிகுதியாக இருக்கின்றன. ஆமாம் பட்டினிப் பட்டாளம் பசிதாங்காமல் பாதி வாழ்க்கையிலேயே நிம்மதி அடைந்து (சலித்துப் போய்?) சாவை வரவேற்றுக்கொள்ளுகின்றனவே, அந்தச் செய்திகள்தான். எத்தனை எத்தனை? இத்தனை இன்னல் இங்கிருக்கும் போது நீ போனதுகூட சரிதான் என்று சில வேளைகளில் என் அறிவு சொல்லும். ஆனால் அறிவு சொல்வது அத்தனையும் மனம் ஏற்றுக்கொள்ளுகின்றதா என்ன? இரண்டும் இரு முனைகள் ஆயிற்றே. அதிலே அறிவுமுனையைவிட மனமுனைதான் கூர்மைமிக்கது என்கிறார்கள். உண்மைதான் போலிருக்கிறது. நீ எங்காவது வாழ்ந்தால் சரி என்று அறிவு எண்ணுகின்றது. ஆனால் மனமோ என்ன வாழ்வு என்று தடுக்கிறது, மனம்தான் வெல்லுகிறது.

அன்றைக்கும் அப்படித்தான் என் அறிவுக்கும் மனத்திற்கும் பெரிய போராட்டம் நடந்தது. அறிவு என்னென்னவோ சொன்னது. ஆனால் அதைக் கேட்டு ஆற முடியவில்லை. என்னை என்னதான் செய்யச்சொல்லுகின்றாய் என்று இந்தப் பாழும் மனத்திற்கு ஈடு கொடுத்துக்கொண்டு மீதிச் செய்திகளைப் படித்துவிடலாம் என்று எண்ணினேன்.

முடியவில்லை. கண்களின் விளிம்புகளில் தேங்கித் தளும்பிக்கொண்டிருந்த நீர் எழுத்தை மறைத்தது. பக்கத்திலே இருந்தவர், என்ன அய்யா கண்ணில், நோயா, தூசியா என்று பதறினார். "தூசிதான்" என்று சொல்லி துடைத்துக் கொள்வது போல் கண்ணீரை மறைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். நான் வேறு என்னதான் செய்ய முடியும்? நோய் என்று சொல்லியிருக்க வேண்டும். 'என்ன நோய் என்ன மருந்திடுகின்றீர்கள்?' என்று கேட்டால் என்ன செய்வது என்று அப்படிச் சொல்லவில்லை.

உனக்கு - உனக்கு என்றால் உனக்கு மட்டும் அல்ல, உங்கள் எல்லோருக்கும்தான், 'யார் நாங்கள் எல்லோரும்' என்று கேட்கிறாய்- தமிழர்களாகிய நீங்கள் எல்லோரும் தான், அவர்கள் அத்தனை பேரிடத்திலும் எப்படி என் கடிதம் சென்று சேரும்? அதனால்தான் உன்னை மட்டும் குறிப்பிட்டு எழுதுகின்றேன். ஆனால் ஓய்வு கிடைத்தால் நீ எல்லோருக்கும் இதைச் சொல்லு. நான் சொன்னதாகச் சொல்ல வேண்டும் என்பதில்லை.

உனக்கு ஏன் அந்த எண்ணம் வந்தது? எப்படி வந்தது? ஏன் வராது? நீ என்ன கப்பலோடு தொடர்பு இல்லாதவனா என்ன? சின்ன வயதில் தூற்றல் தொடங்கினால் போதுமே, காகிதத்தைக் கிழித்து மடித்து எப்படியோ இணைத்து இதோ கப்பல் கப்பல் என்று களித்தாடுவாயே, இந்தக் கண்களின்முன் அந்தக் காட்சி இதோ தெரிகின்றதே. நீ காகிதக் கப்பல் விட்டது மட்டுமா, உனக்கு முன்னால் வாழ்ந்த பேர்கள், உன்னுடைய முன்னோர்கள், நம்முடைய மாவீரர்கள், உலகம் தண்ணீரைக் கண்டு அஞ்சி நடுங்கிய காலத்திலேயே ஆழியின் ஆழம் இவ்வளவுதான் என்று அளந்தது மட்டுமல்ல, மூழ்கி முத்தும் அல்லவா எடுத்து வந்தனர்! காற்றினைத் துணை கொண்டு - இன்று நீ சென்றிருக்கிறாயே அதற்கு அப்போது நம் முன்னோர்கள் சென்று வந்தனரே, சென்றுவந்தது மட்டுமா, அந்த நாட்டையும் வென்றும் அல்லவா வந்திருக்கின்றனர். அந்தப் பரம்பரையிலே வந்தவனாயிற்றே நீ, 'துறைமுகத்திலே வந்திருக்கிறதாமே ஐ. எஸ். எஸ். டெல்லி என்ற போர்க் கப்பல்' என்று யாரோ சொன்ன உடன், அதைப் பார்க்க அநுமதியும் கிடைக்கிறது என்று அறிந்து கொண்டு கிளம்பிவிட்டாய். இயற்கைதான், உன் பரம்பரைக்கு இது இயற்கைதான். ஆனால், என் வயிறு பற்றி எரிகின்றது-நீ இன்று இருக்கும் செயற்கை நிலையை எண்ணிப் பார்க்கவேண்டாமா?

தசை தளர்ந்த கிழவன், தடியில்லாமல் நடக்க எண்ணினாலும், முயலலாமா? பல்லுப் போனபின் முறுக்கு எவ்வளவுதான் மணமாக இருந்தாலும் கடித்துத் தின்ன ஆசைப்படலாமா? கொல்லும் இருட்டிலே என்னடா அப்பா உனக்கு குருட்டாட்டம் வேண்டியிருந்தது?

இளமை இருக்கிறது என்றாலும் வைதிகர்கள் விதவைக்கு இன்பம் கிடைத்திடச் செய்வது இல்லையேடா. அவள் எதிரிலே வருவதுகூட ஏற்றது அன்று என்கின்றனரே - இதைக் கூடவா மறந்துவிட்டாய்.

நீ கப்பல் கட்டிவிட்டவன்தான். ஆனால் இன்று பிறர்க்குக் கப்பம் கட்டி அல்லவா உன் நாடு வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழன் சிறந்தவன்தான். ஆனால் இன்று அவன் சீரழிந்து கிடக்கின்றானே.

இமயமலையில் ஏற்ற கல் எது என்று ஆராய்ந்து எடுத்துவந்தான் உன் முன்னோன் ஒருவன். இன்று இயமம்போல் பிறர் ஆட்சிதரும்

மா. கி. தசரதன் எம். ஏ.

இன்னல் உன்மீது மட்டும் அல்ல, உன் இரத்தத் தொடர்பு கொண்ட தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள், அத்தனைபேர்மீதும் அல்லவா அழுத்திக்கொண்டிருக்கிறது. அவர்கள் ஆட்சியில் அடிமையாகியிருக்கும் நீ, விடுதலை தேடுவதை விட்டு ஏனடா வீணாசை கொண்டாய்?

உன் கண் எதிரிலேயே வடவர் பார்க்க அநுமதி வழங்கி, உனக்கும், உன் உறவினர்க்கும் அநுமதி இல்லை என்று சொல்லிவிட்டார்களாமே!

— 3ம் பக்கம் —

காலத்தை வென்றவள்

வளைகுலுங்கும் மென்கரத்தில் கடிதம் ஏந்தி
வான்பார்த்த நரைக்கேசக் கிழவி யோர்நாள்
கிளைதொங்கும் கனிபோன்ற மகனைக் காண
கடும்புயலாய் விரைந்தோடி வந்தாள்; நெஞ்சில்
விளையாடும் வேதனையின் குறிகள் அந்த
முதியவளின் விழிகளிலே தொக்கி நிற்க
''முளையாத விதையாகிப் போமோ''வென்று
முணுமுணுத்த வண்ணமவள் விரைந்தே சென்றாள்.

கடல்போன்ற பெருங்கூட்டம், நடுவே காளை
கனல்போன்ற விழிகாட்டி முழங்க லானான்
''படல்கட்டி நெருப்புக்கு அணையைப் போடும்
பரிதாபம் இந்நாட்டில் காணு கின்றோம்
தடைபோட்டு உரிமையினைப் பறிக்கப் பார்க்கும்
தரங்கெட்ட அரசாங்கம் தேவை தானா?
உடல்வேகும், உயிர்போகும் ஆனால் எங்கள்
உணர்ச்சிமட்டும் சாகாது ஊற்றாய்ப் பொங்கும்.

பொங்கிவரும் புனல்மீது மணலைக் கொட்டி
பெருவேகத் தைத்தடுக்க முடியும் என்றே
கருதியுளம் பூரிக்கும் அரசாங் கத்தின்
கணக்கென்ன கணக்கோநீர் எண்ணிப் பாரீர்
சருகாக மக்கிப்போய் மடியும் ஏழைத்
தொழிலாளர் வாழ்வுக்கே நஞ்சைத் தேடும்
அரசாங்கம் இருந்தென்ன? இறந்தா லென்ன?
அதிகார வருக்கத்தின் வேரைச் சாய்ப்போம்''

பணம்பெருத்த பெருச்சாளிக் கும்பல் வாழப்
பக்கமேளம் கொட்டுகின்ற அரசாங் கத்தைப்
பிணமாக்கி அதன்மீது ஏறி நின்று
பாட்டாளி வருக்கத்தின் உயிரைக் காப்போம்
மணமற்ற கள்ளிக்கு வேலை யில்லை
மாய்த்திடுவோம் அதன்வேரைச் சாய்ப்போம்'' என்று
குணக்குன்று அடலேறு உரைத்தான்; மக்கள்
கொதித்தெழுந்து புறப்பட்டார் புலிகள் போலே.

புத்துணர்ச்சி பெற்றவளாய்க் கிழவி யங்கே
புறப்பட்ட மகன்முன்னால் வந்தே நின்றாள்
முத்துக்கள் உதிர்கின்ற கண்கள் கண்டான்
முகம்கண்டான் ''அம்மா''வென் றணைத்துக் கொண்டான்
செத்துமடிந் தாலும்நான் போரில் சாவேன்
செங்குருதி இந்நாட்டின் தளைய றுக்கும்
தத்தைமொழி மனைவிக்கு உறுதி கூறு
தப்பித்தால் வருகின்றேன் உரிமை யோடு.

வீரத்தின் சீர்காக்கும் தாயே என்னை
விடுதலைப்பண் பாடவிடு'' என்றே சொல்லி
நீர்வழியும் கண்கண்டான்; கடிதம் கண்டான்
நீங்காத துயரோடு அதைப்ப டித்தான்
''ஆரணங்கு மடிந்திட்டாள் உடனே வந்து
அவளுருவைப் பார்த்துக்கொள்'' என்றே மாமன்
சீராரும் மாப்பிள்ளைக்கு அனுப்பி வைத்த
தந்தியென்று உணர்ந்தான்பின் கண்ணீர் விட்டான்.

துறையூர் ந. அலி

சிங்கம்போல் முழங்கும்தன் மகனைக் கண்ட
தொல்கிழவி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்
அங்கையிலே ஏந்தியஅக் கடிதம் கூட
அவள்வடித்த வெந்நீரால் நனைந்தே போகும்
மங்காத ஒளிவீசும் மகனின் கண்கள்
மாதாவைச் சந்திக்க வில்லை, காளை
தங்காமல் தயங்காமல் உரைக்க லானான்
தோழர்களும் வாய்பிளந்தே கேட்க லானார்.

மணிமாடம் கலைக்கூடம் அமைத்த தோள்கள்
மாசற்ற நம்தோள்கள், மலையை வெட்டி
அணியாக வயல்வெட்டி முடித்த கைகள்
அன்றாடம் உழைக்கின்ற நந்தம் கைகள்
உணியாக இரத்தத்தை உறிஞ்சி வாழும்
உலுத்தர்கள் பஞ்சணையில் அமர்ந்த வண்ணம்
துணிவாக நமையேய்த்து வாழ்கின் றார்கள்
துரும்பாக எறும்பாக நாம்வாழ் கின்றோம்.

அழுகின்ற குழந்தைக்குப் பாலில் லாமல்
அழுகின்றார் தாய்மார்கள், உழைக்கும் தோழர்
புழுவாகத் துடிக்கின்றார் பசியால், ஏழை
புண்ணாக்கைச் சாப்பிட்டு உயிர்வாழ் கின்றான்
எழுதாத கரமில்லை, பேசிப் பேசி
இழிநிலையைச் சொல்லாத மேடை யில்லை
பழுதான மூளையினைப் பெற்றோர் ஆளும்
பரிதாப ஆட்சியிலே பதிலே இல்லை.

விடுதலைப்போர் முரசுகொட்டி விரைந்து சென்ற
வீரர்கள் கூட்டத்தில் வேட்டுச் சத்தம்,
கெடுதலையை விரும்புகிற கீழோர் ஆட்சி
கூலிகளை ஏவிவிட்டுக் கொடுமை செய்ய
இடுப்பொடிந்த வீரர்பலர் மண்ணில் சாய
இருகாலும் வெட்டுண்டு மற்றும் சில்லோர்
சுடுமணலில், அடியற்ற மரம்போல் சாய
சுனைபோல குருதிவெள்ளம் ஓடிற் றங்கே.

அந்நேரம் சிலர்வந்து வீரன் கையில்
அரசாங்க விலங்கிட்டு அழைத்தே சென்றார்
அன்னையவள் துடித்திட்டாள் புரண்டாள், வீரன்
ஆறாகக் கண்ணீரை வடித்தான்; ஆனால்
இன்னல்செய அஞ்சாத கூலி யாட்கள்
இரும்புள்ளம் இளகவில்லை, அவர்கள் வீரன்
பின்னாலே நடந்தார்கள்; துணையி ழந்த
பிணைபோல மனஞ்சோர்ந்து வீரன் சென்றான்.

அதிகாரப் புயலோய்ந்து போயிற் றங்கே
அன்னையவள் பேச்சற்றுக் கிடந்தாள், காலைக்
கதிரோனும் எழுந்துவந்து ஒளியைத் தந்தான்
கிழவிமுகம் ஒளியிழந்த முகமா யிற்று
மதியற்ற வானத்தில் ஒளியா தேங்கும்?
மகனற்ற அவள்வாழ்வும் இருண்ட வாழ்வே
சுதியற்ற பண்ணாகத் தரையிற் சாய்ந்த
தொல்கிழவி காலத்தை வென்று விட்டாள்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 23—8—58 ‖ இதழ் 10

வெங்கட்ராமனின் வெற்று வேட்டு!

"நாட்டின் விடுதலைக்கு நாளெல்லாம் பாடுபட்ட தியாகிகளுக்கு நாம் வணக்கம் செலுத்துவோம்; ஊதியத்தைத் துச்சமென மதித்து ஊருக் குழைப்பதையே பெரிதெனக் கொண்டு உடல், பொருள், உயிர் அனைத்தையும் தேச நன்மைக்கு அர்ப்பணித்த வழக்கறிஞர்களுக்கு நாம் மரியாதை செலுத்துவோம். கொடிகாக்கப் போரிட்டவர்களை நாம் மறந்துவிடக்கூடாது. கொள்கைக்காகப் பலியானவர்களின் படங்களைப் பூஜிப்போம். தடியடிக்கு ஆளானவர்கள், துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானவர்கள்-எல்லோருமே சுதந்திரச் சிற்பிகள்தான். ஆண்டுக்கொரு முறைவரும் இந்தப் புனிதமான சுதந்திரத்திருநாளன்று நாம் அனைவரும் மகிழ்வோடிருந்து பொழுதைப் போக்க வேண்டும். சுதந்திரத் தந்தையை வணங்க வேண்டும். அவரது கொள்கைகளை மறந்துவிடக்கூடாது"—இவ்வளவு அன்பாகவும், குழைவாகவும், பெருந்தன்மையுடனும் பேசக்கூடிய காங்கிரஸ்காரர் யார் என்று கேட்டுவிடாதீர்கள். விரிந்து படர்ந்து கிடக்கும் காங்கிரசில் இப்படி ஒருவர்கூட இல்லையே என்ற கவலைதான் நமக்கும் ஏற்படுகிறது. உலகத்தில் விடுதலை பெற்ற நாடுகளிலெல்லாம் அவரவர்களின் சுதந்திர தினத்தன்று மக்களுக்கு தியாக வரலாற்றைக் கூறுவார்கள்; துவக்கத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் தியாகிகளுக்கு அஞ்சலி செய்வார்கள். அவர்களின் கல்லறைகளுக்கு மலர் மாலை சூட்டுவார்கள். சகிப்புத்தன்மையால்தான் விடுதலை பெற்றோம், அதே சகிப்புத்தன்மையால்தான் பெற்ற விடுதலையைக் காப்பாற்றமுடியும். என்று உறுதி பூணுவார்கள். ஆனால் இங்கு-இந்தியத் துணைக்கண்டத்தில் விடுதலைத் திருநாளானாலும் சரி, வேறு எந்த அரசியல் விழாவானாலும் சரி, ஆளும் கட்சிக்கு எதிர்க் கட்சியைத் திட்டுவதுதான் சொற்பொழிவின் பொருளாக அமைகிறது. பிரபுக்கள் கட்சியாக விளங்கும் காங்கிரஸ் கட்சி இந்தத் திங்களில், இந்தியத் துணைக்கண்டத்தின் பதினோருவது சுதந்திரத் திருநாளைக் கொண்டாடியது. பிரபுக்களும், பேரதிகாரிகளும் பேசுகின்ற கூட்டங்களுக்கு, அவர்களைப் போன்றவர்களும், அவர்களுடைய உதவிகளைப் பெற்றுத் திகழ்கின்றவர்களும்தான் வருகை தருவார்கள் என்பதை உணரத் தவறிய காங்கிரஸ் அமைச்சர்கள், ஊர்தோறும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில், ஏழைகளைக் கொண்டு நடத்தப்படுகின்ற தி.மு.க. வையே பலமாகச் சாடியிருக்கிறார்கள். குமரனைப் பற்றிப் பேசவில்லை; வ. உ. சி.யின் பெயர் அவர்களின் நினைவுக்கு வரவில்லை; சத்தியமூர்த்தி, ஜவகர்லால்-இவர்கள் யாரைப் பற்றியும் பேசவில்லை. ஏன், காந்தியார் தொண்டினைக்கூட நினைவுப்படுத்திப் பார்க்க அவர்களால் முடியவில்லை. நாட்டுப் பிரிவினையைப் பற்றியே அவர்கள் பேசித் தீர்த்திருக்கிறார்கள். தூத்துக்குடியிலே தோற்றுப் போய்விட்டதால் தி. மு. க. வே அழிந்துவிட்டது என்று பெருமூச்சுவிட்டவர்கள், அதற்குப் பிறகு வந்த ஆகஸ்ட் 15-ல் ஏன், தான் தி. மு. க. வைக் காய்கிறார்களோ தெரியவில்லை. உள்ளத்தின் இலட்சணம்' உதட்டில் தெரிகிறது! கேவலம்! கேவலம்!

அமைச்சர் வெங்கட்ராமனைப் படித்தவர் என்று சொல்கிறார்கள். பல நாடுகளைச் சுற்றியவர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவருடைய எந்தச் சொற்பொழிவிலும் 'மேற்படி' தகுதிகள் மருந்துக்குக்கூட இல்லை!

'வரலாற்றுக் காலத்தில் இந்தியா ஒன்றாக இருந்ததில்லை என்று பேசுகிறவர்கள் அப்போதில்லாத ரயிலையும், விமானத்தையும் எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள்'—என்று மதுரையில் பேசியிருக்கிறார். ரயிலைப்போல், விமானத்தைப்போல் 'இந்திய ஒற்றுமை'யும் ஒரு கண்டுபிடிப்புத்தான் என்கிறார் இந்த 'அநியாயப் புத்திசாலி!' நல்ல நிலைமையிலிருந்து வெளிநாட்டுக் காரனிடம் இருந்து விலைகொடுத்து வாங்கும்போது திருப்திகரமாக இருக்கும் விமானம், இந்திய அரசாங்கத்தாரின் கைக்கு வந்த மறுமாதமே கெட்டுப்போய் விடுகிறது; மலையில் மோதுகிறது, கடலில் மூழ்கிவிடுகிறது. மேற்பார்வையும் நிர்வாகமும் உண்மையான விஞ்ஞானிகள் கண்டுபிடித்த விமானத்தையே அழித்து விடுகின்றன. இந்த 'அதிமேதாவிகள்' விமானத்தைப்போல், கப்பலைப்போல் 'இந்திய ஒற்றுமை'யைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம்! இது எத்தனை நாளைக்கு? இனவிடுதலை கோரினால், அதற்கு அமைச்சர் கூறும் பதில், 'விமானம் பாருங்கள்! கப்பல் பாருங்கள்!' இவர் படித்தவராம்! இவருக்கு ஒரு பதவியாம்! சவால் வேறு விட்டுக்கொள்கிறார்! 'உடம்புக்குச் சரியில்லை என்றால் உண்டியலில் பணம் போடு' என்று கூறும் பூசாரியின் பதிலைக்காட்டிலும், மெழுகு திரியை ஏற்றிவைக்கச் சொல்லும் பாதிரியின் உபதேசத்தைக் காட்டிலும், தர்க்காவுக்குப் போகச் சொல்லும் லபையின் கட்டளையைக் காட்டிலும்-நாட்டுப் பிரிவினையோடு கப்பலை விமானத்தை ஒப்பிட்டுப் பேசும் அமைச்சரின் பேச்சு பைத்தியக்காரத்தனமானது ஆறு மாதங்களுக்கு முன் நாட்டுப் பிரிவினையை வைத்து தேர்தலில் போட்டியிட அழைத்த இந்த வெங்கட்ராமனுக்கு திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள் சம்மதம் தெரிவித்து பதிலுக்கு ஒரு நிபந்தனை விதித்தார். அதற்கு இதுநாள் வரை வெங்கட்ராமன் எங்கும் பதில் கூறவில்லை. விமானம் வேண்டுமா, விடுதலைத் திராவிடம் வேண்டுமா என்று இன்றும் கேட்போம்; அமைச்சர் தயாரா?

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

அதைப் படிக்கும்போதுதான் என் கண்களில் நீர் முட்டியது. நீ என்ன பாடு பட்டாயோ? உன் மனம் என்ன வேதனைப்பட்டதோ? எப்படிக் கலங்கினாயோ? துடிதுடித்திருப்பாய்—மனம் அனலில் இட்ட மெழுகுபோல் கரைந்திருக்குமே? எப்படித் தேற்றிக் கொண்டாய்? தேம்பும் ஒலி பிறர்க்குக் கேட்காமல் அடக்கிக் கொண்டாயா, இல்லை கோழைபோல் அழுது அரற்றினாயா? என்ன செய்தாயோ நான் அறியேன்.

ஆனால் நான் அழுதேன். அது தானே என்னால் செய்யமுடியும். ஏதாவது செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்கள்தான் எமக்கென்ன எது குறித்தும், ஏராளன், எங்கள் எசமானர் நேருவின் பார்வைக்கு நேரே நாங்கள் நிற்கவேண்டும் என்று அதிலே குறியாக இருக்கின்றனரே!

செந்தில், வந்திருப்பது 'டெல்லி' கப்பல் என்றார்களே, அந்தப் பெயரைப் பார்த்தாவது நீ தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா. அது நம்முடைய தூத்துக்குடி வீரர் விட்ட கப்பல் அன்று என்பதை?

இதோ என் காதுகளிலே ஒலித்துக்கொண்டிருக்கிறது; 1948 ல் என்று நினைவு, சேத்துப்பட்டுக் கூட்டம் ஒன்றிலே, நம் அண்ணா-ஆமாம் நீ நினைப்பது சரிதான்-பேசும்போது சொன்னார். இப்போது சென்னையின் துறைமுகத்திலே டெல்லி என்ற போர்க்கப்பல் வந்து நிற்கிறது என்று பெருமை பேசுகின்றனர். பெருமை இருக்கட்டும் ஒரு பக்கம். இந்த மன்றம் வ. உ. சிதம்பரனார் பெயராலே அமைந்திருக்கிறது. இந்தச் சிதம்பரனார்தான் முதன் முதலில் கப்பல் கம்பெனி நடத்தி விழிப்புண்டாக்கியவர். உரிமைபெற்ற இந்தியத் துணைக்கண்டம், முதன் முதலில் விட்ட கப்பலை அவர் பெயராலே விட்டிருந்தால் சென்னையின் துறைமுகத்திலே நிற்கும் அந்தக் கப்பலை ஓடிச்சென்று காண ஆவலிருக்கும். ஆனால் அவர் பெயரை வைக்காமல் கடலையே காணமுடியாத டெல்லி நகரத்தின் பெயரை இட்டிருக்கின்றனரே என்றார்.

உன்னிடத்திலே சொல்லிக்கொள்வதில் என்ன-மறுநாள் கல்லூரிக்கு விடுமுறை, எழுதிப் போட்டுவிட்டுப் போய்ப் பார்த்து வரவேண்டும் என்று முன் நாளே நாங்கள் ஒரு நான்கைந்து பேர் எண்ணியிருந்தோம். ஆனால் அவர் பேருரையைக் கேட்ட பின்னர் நண்பர்களும் வற்புறுத்தவில்லை நானும் போகவில்லை.

நீயும் அப்படிப் போகாமல் இருந்திருக்கவேண்டும். ஆனால் எங்களுக்கு அன்றையதினம் அவருடைய அறிவுரை கிடைத்தது, நாங்கள் உணர்ந்தோம். நீதான் கடலுக்கப்பால் ஓடிச்சென்றிருக்கின்றாயே, உனக்கு யார் அப்படி அங்கே கிடைத்திட இருக்கிறார்கள்.

அதை எண்ணித்தான் கண்ணீரைத் துடைத்துக்கொண்டேன்.

எதை எண்ணி என்று கேட்கிறாயா? சொல்லத்தானே இந்தக் கடிதம் எழுதத் தீர்மானித்தேன். சும்மா 'நலம்; நலமறிய ஆவல்' என்பதை எழுதுவதற்கா? அதைச் செய்வதாயின் இத்தனை நாள் ஏன் எழுதாமல் விட்டேன்?

'டெல்லி'யின் பார்வை, உனக்கும் உன் போன்றோர்க்கும் கிடைக்கவில்லை. ஆனால் இரங்கூன் வாழ் வடவருக்குக் கிடைத்தது என்று செய்தி சொல்கிறது.

இங்கே, தாயகத்திலேயே இருக்கும் எங்களுக்கும் டெல்லி தேவதைகளின் கண்பார்வை கிட்டுவது இல்லை. இங்கிருக்கும் அமைச்சர்கள் தவமாம் தவம் இருந்தாலும் அங்கிருந்து தயவு கிடைத்திடுவது இல்லை. நன்மை பிறந்திடுவது இல்லை. அங்கே உனக்கும் 'டெல்லி'யைப் பார்க்க அனுமதி இல்லை!

இங்கே வடவர் என்றால் உடனே வாஞ்சை பிறக்கிறது டெல்லிக்கு. வளம் தேவையா இல்லையா என்பதையும் எண்ணிடாமல் வாரி வழங்குகின்றது.

அங்கே, வடவருக்கு 'டெல்லி'யைப் பார்க்க 'பாஸ்' கிடைக்கிறது! இது வேடிக்கையாக இல்லை? என்ன விந்தை என்றுதானே திகைக்கின்றாய்?

இடையிலே கடல் ஆயிரக்கணக் கான கல் தொலைவு பரந்து விரிந்து இருக்கிறது.

இக்கரையில் இருந்தும் தமிழன் இன்னல்படுகின்றான். அக்கரைக்குச் சென்றும் அவதி அவனை விடவில்லை. இக்கரையில் இருந்தும் வடவர் வசதி பெறுகின்றனர். அக்கரையிலும் அவர்கள்பால் காட்டப்பெறும் அக்கரை மிகுந்திடுகின்றது.

காரணம்—?

'வெகுதூரக் கடல் தாண்டி'ப் பயணம் செய்தாலும் டெல்லி **டெல்லிதான்; சென்னை சென்னைதான்; வடவர் வடவர்தான்; தென்னவர் தென்னவர்தான்,**

அன்புள்ள செந்தில், அந்தச் செய்தியிலேயிருந்து இன்னொரு செய்தியும் நான் பெற்றேன்; ஆனால் அதைச் சொல்ல கொஞ்சம் தயங்குகின்றேன். ஏன் தெரியுமா? அதைச் சொன்னால் வேண்டுமென்றே நான் ஒரு கட்சியைக் குறை சொல்கிறேன் என்று உன்னிடம் சொல்வார்கள்.

தமிழர்க்குப் பார்வைச்சீட்டு தராமல் வடவருக்கு மட்டும் தந்தது 'பர்மா இந்தியக் காங்கிரஸ்' கட்சியாம். நான் ஒன்றும் விரிவாக இதைப் பற்றி எழுத விரும்பவில்லை.

'செந்தமிழ் நாடென்ற போதினிலே...' என்று சங்கீதவாணி இசைத்தாலும், 'தமிழன் என்ற பெருமையில்...' என்று நாமக்கல்லார் யாப்புக் கூறினாலும், இங்கிருக்கும் அமைச்சர்கள் தமிழ் தமிழ்நாடு என்று எங்கட்கும் ஆசை இருக்கிறது என்றாலும் காங்கிரஸ் கட்சியின் கண்களுக்கு வடக்குதான் தெரியும்; வடவர்தான் தெரிவர். அவர்கட்குத்தான் வாழ வகை செய்வர்.

இதையும் நீ உன் இனத்தவர்களுக்குக் கூறு.

அன்புள்ள,

பூங்குன்றன்.

செப்டம்பர் திங்களில்
வெளிவருகிறது!

கன்னித்தமிழ் ஏடு!
கருத்தொளிரும் மலர்க்காடு!
கற்பனையின் நீரூற்று!

"அன்னை"

திங்கள் ஒருமுறை! உங்கள் கரங்கட்கு வருமுறை!

"வாள் தருவாள், வேல் தருவாள், வேகத்திற்குயிர் தருவாள்.
தாள்பணியாள், தலைகுனியாள்,
தமிழ்காப்பாள் நம் "அன்னை"

ஆசிரியர்:
டாக்டர். சத்தியவாணிமுத்து,
M. L. A.

★

விபரங்கட்கு:
பொறுப்பாளர், "அன்னை"
179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை-1.

இலங்கை யு.என்.பி.(கட்சி) கவிழ்ந்தது ஏன்?

இந்தியத் துணைக் கண்டத்தில் காங்கிரஸ் கட்சியைப்போல கீர்த்தியும் பலமும் பெற்று விளங்கிய இலங்கையின் யு. என். பி. கட்சி, முறியடிக்கப்பட்ட வரலாற்றை இந்தக் கட்டுரை எடுத்துரைக்கிறது. இந்தக் கட்டுரையாளர் முப்பதாண்டு காலமாக இலங்கையின் அரசியல் நிகழ்ச்சிகளை நுணுக்கமாகக் கவனித்தறிந்து வருபவர். தமிழ்மொழியின் பாலும், தென்னாட்டு விடுதலை உணர்ச்சியின் பாலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். இலங்கையில் நடந்ததைப் போல் தமிழகத்தில் காங்கிரசை வீழ்த்தமுடியும் என்ற நம்பிக்கையில் இந்தக் கட்டுரையைத் தீட்டியிருக்கிறார். [ஆ-ர்.]

ஆ. நடராசன்

இலங்கை ஒரு சிறிய நாடு. 80 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஏறத்தாழ 400 ஆண்டுகள் அந்நாடு அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கடைசியாக ஆட்சி செலுத்திய ஆங்கிலேயர் 1948 ல் இலங்கைக்கு முழு அரசியல் விடுதலை வழங்கினர். அந்தச் சமயம் அங்கே **ஐக்கிய தேசியக் கட்சி** என்று பொருள்படும் **யுனைடட் நேஷனல் பார்டி** (U. N. P.) பல பிரமுகர்களையும் பெரிய செல்வர்களையும் படிப்பாளிகளையும் கொண்ட செல்வாக்குள்ள பெரிய கட்சியாக இருந்தது. 1948 ல் பாராளு மன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக அது விளங்கியதால் அதன் தலைவர் **ஸ்டீபன் சேனநாயக்கா** முதல் சுதந்திர மந்திரி சபையை அமைத்தார். சுமார் நான்கு ஆண்டுகள் ஆட்சி நடத்திய அவர் திடீரென்று காலஞ் சென்றதால் அவர் மகன் **டட்லி சேனநாயக்கா** அக்கட்சியின் பெயராலேயே பிரதமர் ஆனார்.

மறுமுறை நடந்த பொதுத் தேர்தலிலும் அதே ஐக்கிய தேசியக் கட்சியே அதிக இடங்களைக் கைப்பற்றியது. **டட்லி சேனநாயக்காவே** மறுபடியும் முதல்வர் ஆனார்.

யு. என். பி.யை வீழ்த்தி பதவிக்கு வருவதற்காக எதிர்க்கட்சிகள் பலவித முயற்சிகள் செய்து ஆளும் கட்சிக்கு தொல்லையைக் கொடுத்து வந்தன.

பௌத்த தத்துவத்தில் ஈடுபாடுள்ள **டட்லி சேனநாயக்கா**வால் நிலையை சமாளிக்க இயலவில்லை. அதனால் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டு அதே கட்சியின் மற்றொரு தலைவரான **ஸர் ஜான் கொத்தலாவலையை** பிரதமர் ஆக வரவிட்டுக் கொடுத்தார்.

பாண்டுங் வீரர் என்று பின்னால் பெயர் வாங்கிய இப்பேரமைச்சர் ஸர் ஜான் கொத்தலாவலை நாள் ஒரு சொல்லும் பொழுதொரு கொள்கையும் உடையவர்.

இவர் ஒருநாள் தம் தமிழ் நண்பர்கள் அழைப்பின்மீது யாழ்ப்பாணம் சென்றார். தமிழ் நண்பர்கள் அந்நாட்டில் அதுவரை யாருக்கும் அணிவிக்கப்படாத அளவு பெரிய மலர்மாலைகளை அணிவித்து வரவேற்றார்கள். வரவேற்பை ஏற்று மகிழ்ந்த அவர், அங்கே நடந்த பொதுக்கூட்டத்தில் சிங்களத்துடன் தமிழும் அரசியல் அலுவல் மொழியாக சரிசமான நிலைபெறும் சட்டத்தைச் செய்யப் போவதாகப் பேசினார். இதனால் அப்பகுதியில் தம் நண்பர்கள் செல்வாக்குப் பெற வாய்ப்புண்டு என்று கருதினார் போலும்.

இந்தப் பேச்சு நாட்டின் மற்ற பாகங்களில், சிங்களர் பெரும்பான்மையாய் உள்ள பகுதிகளில் எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் தலைதூக்கச் செய்தது.

தமிழுக்கு சமான நிலை வழங்கப்படுவதை ஆரம்பமுதல் ஆதரித்து வந்தவரும் இன்று பேரமைச்சராக இருப்பவருமான பண்டாரா நாயக்கா ஆளும் கட்சியான U. N. P. யை முறியடித்து தான் பதவிக்கு வர இதை ஒரு அரிய வாய்ப்பாகக் கருதினார்.

சுலபத்தில் ஆவேசத்துக்கு ஆளாகும் சிங்கள மக்களின் இயல்பை நன்கு அறிந்தவரும் அரசியல் சாணக்கியருமான அந்த பண்டார நாயக்கா தமிழுக்கு சமான நிலை அளிக்கக்கூடாதென நாடெங்கும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தினார்.

சிங்களம் ஒன்றே அலுவல் மொழி ஆக்கப்பட வேண்டுமென்ற கொள்கையைக் குறிக்கோளாகக் கொண்டு இன்றையக் கல்வி மந்திரி **தகா நாயக்கா** தலைமையில் **சிங்கள பாஷா பெரமுன** என்று புதிய கட்சி வேறு தோன்றிற்று.

சம சமாஜக் கட்சி என்னும் இடதுசாரிக் கட்சித்தலைவர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, அக்கட்சி இன்றைய வேளாண்மை அமைச்சர் **பிலிப் குணவர்தன** தலைமையிலும் இன்றைய எதிர்க் கட்சித்தலைவர் **என். எம். பெரயரா** தலைமையிலும் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தது.

நாட்டின் அரசியல் நிலை குழப்பமும் சீர்கேடும் கொண்டதாயிற்று. ஆளும் கட்சியிடம் மக்களுக்கு அவநம்பிக்கையும் அதிருப்தியும் வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது. மக்கள் மனத்தைத் திரும்ப வெல்வதற்காக ஐக்கிய தேசியக்கட்சி பெரிய பௌத்த ஆலயம் உள்ள கழனி என்னும் கொழும்பின் அருகிலுள்ள ஊரில் மகாநாடு கூட்டிற்று. அம்மகாநாட்டில் சிங்களமே நாட்டின் தனி அலுவல் மொழி என்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி பெரிய தீர்மானமும் நிறைவேற்றிற்று.

ஆனால் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. **பிரதமர் கொத்தலாவலை** அநேக யாழ்ப்பாணத் தமிழர்களை தம் நண்பர்களாகக் கொண்டவர். பெண்கள் சொல்லுக்கு தனி மதிப்பு அளிப்பவர். இத்தகையவரை எப்படி நம்புவது? இவர் கட்சி செய்த தீர்மானம் மக்களை ஏமாற்றச் செய்ததோ என்ற சந்தேகம் பரவிற்று.

ஆனால் **கொத்தலாவலையும்** அவர் கட்சித்தலைவர்களும் "மக்களைத் திருப்திப்படுத்தியாயிற்று; நம் கட்சியிலுள்ள மக்கள்நம்பிக்கையை அசைக்கமுடியாது" என்று கணக்குப் போட்டனர். அமெரிக்க நாட்டின் ஆதரவும் பணப்பெருக்கமும் கொண்ட யு.என்.பி. எட்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி நடத்தியதால் செருக்கும் இறுமாப்பும் கொண்டு மறுபடியும் தங்களுக்கே பொதுத்தேர்தலில் வெற்றி நிச்சயம் என்று கருதிற்று. இந்த மமதையில் 1956 ல் பார்லிமெண்ட்டை கலைத்துவிட்டு மறுதேர்தலுக்கு யு. என். பி. உத்தரவிட்டது.

இத்தகைய நிலை என்று வரும், என்று காத்திருந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடினர்கள். ஒற்றுமைப் பேச்சுக்கள் நடத்தினர்கள்.

பண்டார நாயக்காவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இன்றைய விவசாய அமைச்சர் **பிலிப் குணவர்தனவின்** புதிய (இடதுசாரி) **சம சமாஜக் கட்சிக்கும்** இன்றைய கல்வி அமைச்சர் **தகா நாயக்காவின் சிங்கள பாஷா பெரமுன** கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டது. இம்மூன்றும் சேர்ந்த கூட்டணிக் கட்சிக்கு **மகாஜன எக்சத் பெரமுன** என்ற புதிய பெயர் அமைந்தது.

பொதுத் தேர்தலில் அநேகமாக எல்லாத் தொகுதிகளிலும் நேரடிப் போட்டியே ஏற்பட்டன.

பண்டார நாயக்கா அமைத்த புதிய கூட்டணிக்கட்சியான எம். இ. பி. (**மகாஜன எக்சத் பெரமுன**) தேர்தலில் பெரும் வெற்றி பெற்றது. 100 இடங்கள் கொண்ட பார்லிமெண்டில் 60 இடங்களைக் கைப்பற்றியது. பணப் பெருக்கமும் செல்வாக்கும் பெற்றிருந்த ஆளும் கட்சியாக இருந்த யு. என். பி. க்கு எத்தனை இடங்கள் கிடைத்தன? எட்டே இடங்கள் தாம்! பரிதாபமான தோல்வி!

எம். இ. பி. என்ற கூட்டணி ஏற்படாதிருந்தால் **ஐக்கிய தேசியக் கட்சியே** பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி மறுபடியும் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்க முடியும். ஒரே தொகுதியில் இரண்டு அபேட்சகர்களுக்குமேல் போட்டியிடுவதால் ஆளும் கட்சி சிறுபான்மை ஓட்டுக்களைப் பெற்று பெரும்பாலான இடங்களைப் பெற்றுவிடும் அநியாயம் நமக்குப் புதியதன்று. இலங்கையில் 1956 தேர்தலில் இது நடக்கவொட்டாதபடி எம். இ. பி. கூட்டணி செய்தது.

இங்கிலாந்து, அமெரிக்காபோன்ற ஜனநாயகம் வளர்ந்த நாடுகளில் இரண்டு கட்சிகள்மட்டுமே மக்கள் செல்வாக்குப் பெற்ற பெரிய கட்சிகளாக விளங்குகின்றன. அதனால் தேர்தலில் கட்சிகள் மாறி மாறி வெற்றி பெற்று ஆட்சிக்கு வர ஏதுவாகிறது. அதனால் மக்கள் நலன்கள் நன்கு கவனிக்கப்படுகின்றன.

நம்நாட்டில் உருப்படியான எதிர்க்கட்சிகள் இல்லை. ஒரே திமிர் பிடித்த காங்கிரஸ்தான் இதுவரை ஆட்சி நடத்துகிறது. ஜனநாயகம் என்ற பெயரால் ஜாதிநாயகம், பணநாயகம் நம்மை ஆளுகிறது.

வருகிற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரு திட்டத்தின்கீழ் உடன்பாட்டுக்கு வந்து பலமுனைப் போட்டியைத் தவிர்த்து காங்கிரசுடன் நேரடிப் போட்டியிட வேண்டும்.

இந்த முறை ஒன்றினால்தான் கேள்வி முறையின்றி ஆணவம் கொண்டு ஆளும் காங்கிரஸை வீழ்த்தமுடியும். ★

தி. மு. க. தலைமை நிலைய வெளியீடு

'வளம் காண வழி'

அண்ணாவின் அற்புதக் கருத்தோவியம்

தென்னகத்தின் துயர்நீங்க வழிகூறும்
துல்லிதமான பொருளாதாரப்
பேரேடு!

விலை 8 அணா

விவரங்களுக்கு: **தி. மு. க. தலைமை நிலையம், சென்னை - 13.**

குறிப்பு:—தனிப்பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன், 15 புதுக்காசுகள் அஞ்சல் செலவிற்காக அனுப்பவும். 50 பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோருக்கு 20 சத விகிதம் கழிவு உண்டு. **வி. பி. பி. இல்லை.** தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

மயிலாடும் பாறை

எஸ். எஸ். தென்னரசு

ரஞ்சிதம் ஜன்னல் திரையை விலக்கிக்கொண்டு தெருப்பக்கமாகப் பார்த்தாள். கங்கைமுத்து தேக்கு மரத் தேரைப்போல் ஊர்ந்து வந்து கொண்டிருந்தார். அவர் தன்னைத் தேடித்தான் வருவார் என்று ரஞ்சிதம் நினைக்கவில்லை. தாயம் போடுவதற்கு —சொக்கட்டாங்காய் ஆடுவதற்கு அவருக்கு எத்தனையோ வீடுகள் அந்தத் தெருவில் இருந்தன. எந்த வீட்டிற்குள் அவர் நுழைந்தாலும் அவரை வரவேற்று உபசரிக்க ஏராளமான பெண்கள் இருந்தார்கள். அவரிடம் ஆட்டம் பயிலாத பெண்கள், அடி, உதை, குட்டு வாங்காத இளந்தாசிகள் திருமயத்தில் இல்லை. பெரும் பெரும் பணக்காரர்களெல்லாம் வாய்விட்டுக்கூடச் சொல்லக் கூசும் தாசிகளின் பெயர்களையெல்லாம், நட்டுவனர் கங்கைமுத்து அலட்சியமாகவும் அதிகாரத்துடனும் அழைத்துப்பேசுவார். வேலைஏவுவார். திரவியத்தையும் பெற்றுக்கொண்டு ‘தித்திக்கும் செங்கரும்பே’ என்று பிரபுக்களை வர்ணிக்கவைக்கும் வைர விழி வனிதாமணிகளை, கங்கைமுத்து கருங்குரங்கு, காட்டெருமை, கூனல் கிழவி, குறுமுயல், ஒட்டைச்சிவிங்கி என்று பட்டப்பெயர் இட்டு அழைப்பார். அவர் என்னதான் திட்டினலும் அவர்கள் சினம்கொள்ள மாட்டார்கள்; சிந்தை நோவதுமில்லை. எந்தத் தாசி வீட்டுக்கு எவ்வளவு பெரிய பணக்காரன் வந்திருந்தாலும் கங்கைமுத்து பயப்படுவதில்லை. உள்ளே போவார். ‘சின்னக்குட்டி’ என்று கூப்பிடுவார். வீட்டுக்கு வந்திருக்கும் செல்வந்தரின் பிடியிலே இருந்தாலும், மடியிலே இருந்தாலும் அவர்கள் திமிரிக்கொண்டு அறைக்கு வெளியே ஓடிவந்துவிடுவார்கள். கங்கைமுத்து, சிரித்துக்கொண்டே அவர்களின் உதட்டைக் கிள்ளுவார், கன்னத்தில் தட்டுவார். ‘சமையல் என்ன’ என்று கேட்பார். ‘மலையாள அவியல்’ என்பாள் அவள். ‘கோழி ரசம் இல்லையா’ என்பார் பதிலுக்கு! ‘பால் கறக்கும் பசுவுக்கு பருத்திப் பால் இல்லாமலிருக்குமா?-என்பாள் இவள். “சீ! போக்கிரிப் பெண்ணே!” என்று அவள் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுப் போவார்.

தேவ தாசிகள் நிறைந்த அந்தத் தெருவுக்குள் இவ்வளவு மரியாதையையும், அபிமானத்தையும் பெற்ற கங்கைமுத்து ஒரு வருஷ காலமாக ரஞ்சிதத்தையே மறந்திருந்தார். அன்று திடீரென்று வீட்டுக்குள் நுழைந்தார். ரஞ்சிதத்தின் உடல் நடுக்கமுற்றது. என்ன செய்வதென்று அறியாது திணறினள். ஆசனத்தை எடுத்துப் போட்டாள். கங்கைமுத்துவுக்குக் கண் கலங்கியது. ரஞ்சிதம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்.

“ரஞ்சிதம்!”-தளதளத்த குரலில் நட்டுவனர் பேசினர்.

ரஞ்சிதம் பதில் பேசாமல் கண்ணீரைத் துடைத்தாள்.

“ஒரு முக்கியமான விஷயமாக உன்னிடம் வந்திருக்கிறேன். காலம் போன காலத்தில் எனக்குக் கை கொடுப்பாய் என்று நம்பித்தான் வந்திருக்கிறேன். காலம் இப்போது உன்னுடையது. நீ எதையும் செய்யலாம். நான் உன்னுடைய ஆசான். நன்றியுள்ள மாணுக்கர்களுக்கு நான் மூன்ருவது தெய்வம். இதோ பார், எனக்கு வெண்குஷ்டம் படர ஆரம்பித்துவிட்டது. அதை நினைத்து நினைத்து நான் கண்ணீர் வடிக்கிறேன். என் குடும்பத்தைப்பற்றி நான் பெரிதும் கவலைப்படுகிறேன். எனக்கோ இரண்டு மனைவிகள். ஒருத்தி கொடுமைக்காரி, இன்னெருத்தி செலவாளி. ரஞ்சிதம், நான், உன்னிடம் பொருள் கேட்க வரவில்லை. சேதுக்கரைச் சங்கிலே சேனைப் பால் புகட்டிய காலத்திலிருந்து நான் உனக்குச் சேவை செய்திருக்கிறேன். இதற்குச் சாட்சி வேண்டியதில்லை. நன்றி மறவாத செங்கமலத்தின் செல்வக் குமாரி நீ. என்றும் மறக்கமாட்டாய் என் தொண்டை என்றநம்பிக்கை எனக்கு இருப்பதால்தான் கோபதாபங்களையெல்லாம் மறந்து, வீடு தேடி வந்திருக்கிறேன். உனக்கு மனம் இளகுகின்றதா ரஞ்சிதம்!”-கங்கைமுத்து தாழ்ந்த குரலில் பேசினர்.

“பொல்லாதவள் என்று பெயர் எடுக்க நான் எப்போதுமே விரும்பியதில்லை. அதுவும் என்னுல் செய்ய முடிந்த உதவியை உங்களுக்குச் செய்யாவிட்டால்சுற்றத்தார்என்னைத் தூற்றமாட்டார்களா?” கண்களைத் துடைத்துக்கொண்டே ரஞ்சிதம்பதில் சொன்னள்.

“செய்யமுடியாத உதவியைச் செய்யும்படி நான் உன்னைவற்புறுத்தவில்லை ரஞ்சிதம். நீ நினைத்தால் நிறைவேறக்கூடியது. நீமட்டும் எனக்கு இந்த உதவியைச் செய்தால் எனக்கும் லாபம், உனக்கும் கீர்த்தி, என்னுடைய குடும்பமும் செழிக்கும் வறுமையும் ஒழியும்!”-மறுபடியும் நட்டுவனர் பேசினர்.

“பணம் வேண்டுமானல் நான் தருகிறேன். தேவைப்படும்போது கேட்டனுப்புங்கள் கொடுத்தனுப்புகிறேன். இதற்காக ஏன் மனதை வாட்டிக்கொள்ள வேண்டும். கங்கைமுத்து பணக் கஷ்டத்தால்தொல்லைப் படுகிருர் என்ருல் பார்க்கிறவர்களுக்குக் குறைவாகத்தான் தெரியும். எனக்கும் அது புரிகிறது.”-ரஞ்சிதம் கனிவோடு சொன்னள்.

“எவ்வளவு நாளைக்கு நீ கொடுத்துக்கொண்டிருக்கப் போகிருய்? யாராயிருந்தாலும் எவ்வளவு நாளைக்குத்தான் மனம் வரும்! வந்த அன்று வாழைஇலை, அடுத்தநாளைக்கு தையல் இலை, மூன்ரும் நாள் கையிலே’ என்று கேள்விப்பட்டதில்லையா? நாளடைவில் அன்பும் மரியாதையும் குறையும். எதற்கு இதெல்லாம்! நான் கற்றுக் கொடுத்த வித்தை எனக்குப் பயன் படாமற் போகாது என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். அடுத்த மாதம் எனக்காக என்னேடு இராமனதபுரம் வரை வரவேண்டும். அங்கு விஜய ரகுநாத சேதுபதியின் மாளிகையில் ஒரு நாட்டியப் போட்டி இருக்கிறது. அதில் வெற்றிபெற்ற நாட்டியக்காரிக்கு ஆயிரம் வராகன் பரிசு தருகிருர்கள். அது மட்டுமல்ல. வெற்றிபெற்ற நாட்டியக்காரியின் ஆசானை விஜய ரகுநாதர் ஜமீன் வித்வான்களில் ஒருவராக ஏற்றுக் கொள்கிருர். மாதம் ஐநூறு ரூபாய் சம்பளம். ரஞ்சிதம், தமிழ்நாட்டில் உனக்கு மிஞ்சியவள் யாருமில்லை. நீதான் வெற்றிபெறுவாய். உன்னுல் நான் பெருமை பெறுவேன். வருவாய் பெறுவேன்”-கங்கைமுத்து இதை வெளியிடும்போது தன்னையும் அறியாத ஒரு அதிர்ச்சியோடு சொன்னர். அவளை ஆட்டிவைத்தவர், அதிகாரம் செய்தவர் அன்று ஏனே பயந்தார். மனிதன் ஒரு உண்மையை உணர்ந்தும், அதற்கு நேர் விரோதமான செயலில் ஈடுபடும்போது நெஞ்சம் பணிகிறது; பலவீனமடைகிறது. ரஞ்சிதம் ஆடமாட்டாள் என்பதை அவருக்கு மனம் உணர்த்தியது. ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கை அவரை அவளிடம் தள்ளி வேடிக்கை பார்த்தது.

ரஞ்சிதம் நட்டுவனரின் வேண்டுகோள் கேட்டுத் திடுக்கிட்டாள். மயக்கம் வருவதுபோல் தெரிந்தது. இளங்காற்றில் வளைந்து நிமிரும் நாணலைப்போல் ஒடிந்து நிமிர்ந்து அறைக்குள் ஓடினள். நெடுநேரமாகியும் திரும்பி வரவில்லை. நட்டுவனர் ஜன்னல் வழியாகப் பார்த்தார். பஞ்சணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அவள் விம்மி விம்மி அழுவது தெரிந்தது. கங்கைமுத்தருக்கு தன் முயற்சி தோல்வி கண்டுவிட்டதில் அளவுகடந்த வருத்தம். துணேடுதுணுய்த் துக்கித்து நின்ருர்.

இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு அவருக்கு ஏதோ யோசனை தட்டுப்பட்டுவிட்டது. ‘நன்றி கெட்டவள்! இரு உன்னையும் பார்த்துக்கொள்கிறேன். இந்தக் கடைசி முயற்சியும் தோற்றுவிட்டால் கங்கைமுத்துதான் உனக்கு பரம்பரை விரோதி!’ என்று முணுமுணுத்துக்கொண்டே நட்டுவனர் வெளியில் கிளம்பினர்.

ரஞ்சிதம் அன்று முழுதும் உணவு கொள்ளவில்லை. நித்திரையும் பிடிக்கவில்லை. மனம் குழம்பியிருக்கும் போது உடம்புக்கு எதுவும் பிடிப்பதில்லை. பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்கிருர்கள். பசியையும் மிஞ்சியது கவலை. எதை எதையெல்லாமோ விரட்டிவிடுகிறது பசி, அந்தப் பசியையும் மதிப்பதில்லை கவலை.

இரவெல்லாம் தூங்காமல் இருந்த ரஞ்சிதம் அதிகாலையில் சற்று கண் அயர்ந்தாள். வழக்கமாக எழுந்திருக்கும் நேரத்தையெல்லாம் தாண்டி அவள் தூங்கிக்கொண்டே இருந்தாள். வேலைக்காரி தட்டிஎழுப்பினள். அவள் எழுந்திருக்கும்போதே வெளிமுற்றத்தில் யாரோ இரண்டு ஆடவர்களின் பேச்சுக்குரல் கேட்டது. அதில் ஒன்று நட்டுவனரின் குரல். மற்ருென்று அவளுக்குப் பழக்கமான குரலாக இருந்தது. ஆனல் நினைவில்லை. ரஞ்சிதம் முகத்தைத் துடைத்துக் கொண்டு நீராகாரத்தைக் குடித்துவிட்டு வெளியில் வந்தாள். கங்கைமுத்து நட்டுவனரும் கோபால கிருஷ்ணன் பிள்ளையும் பேசிக் கொண்டிருந்தார்கள். கோபால கிருஷ்ணன் பிள்ளையைப் பார்த்ததும் அவளுக்கு அடிவயிற்றில் தீப்பற்றியது போலிருந்தது. நெடுநாட்களுக்குப் பிறகு ரஞ்சிதத்தைப் பார்க்கும் கோபால கிருஷ்ணன் பிள்ளை சுகதுக்கங்களையெல்லாம் விசாரித்தார். ரஞ்சிதத்தின் குடும்பம் வாழ்ந்தால் தனக்குத்தான் பெருமை என்று சொல்லிக்கொண்டார். ரஞ்சிதம் மரியாதையோடும் அன்போடும் சுவரில் சாய்ந்து புடவை முந்தானையை பின்னிக்கொண்டு நின்ருள். இடையிலே சமையற்காரி குறுக்கிட்டு ‘பலகாரம் தயாராகிவிட்டது, பரிமாறட்டுமா?’ என்ருள். நட்டுவனரும் கோபாலகிருஷ்ணன் பிள்ளையும் கொஞ்சம் பிகுபண்ணினர்கள். ரஞ்சிதம் விடவில்லை. பலகாரம் பரிமாறச் சொன்னுள். கோபால கிருஷ்ணன் பிள்ளை வெற்றிலைக் காவியேறிய பற்களைத் துலக்க மடியிலே வேப்பங்குச்சியோடு வந்திருந்தார். அந்த வேலையை அவர் தொடங்கினர். ரஞ்சிதம் வெள்ளிச் செம்பில் வெந்நீர் கொண்டுவந்து வைத்தாள். முகம் துடைக்கத் துண்டு கொண்டு வந்தாள். அவள் காட்டிய பணிவும் அன்பும் மரியாதையும் அவரைத் திணறடித்தன. எதிர்த்தால் சிலர் அடிமையாவார்கள், புகழ்ந்தால் போதும் சிலருக்கு - எந்த உதவியும் செய்வார்கள். ஆனல் கோபால கிருஷ்ணன் குழம்பினர். தான் சொல்லவந்த சேதியை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் விழித்தார்.

“ரஞ்சிதம்!”

“என்ன வேண்டும், குளிக்கிறீர்களா?” என்று மான்போல் துள்ளிக் குதித்து ஓடிவந்து கேட்டாள்.

“கங்கைமுத்துவுக்குக் கைகொடம்மா! அவர் உன்னை வளர்த்தவரில்லையா? அதை நினைத்துப் பார்க்க வேண்டாமா?” என்ருர் கோபால கிருஷ்ணர்.

அணைந்த தீ அவள் நெஞ்சில் மீண்டும் பற்றியது. கையிலிருந்த நெய்க்கிண்ணத்தை நழுவ விட்டுவிட்டாள்.

கோபாலகிருஷ்ணர் திரும்பிப் பார்த்தார். ரஞ்சிதம் அந்த இடத்தில் இல்லை. அறைக்குள்ளே ஓடிவிட்டாள். கோபாலகிருஷ்ணன் முகம் கழுவிவிட்டு உள்ளே போனர். ரஞ்சிதம் கட்டிலில் கிடந்தாள்.

“ரஞ்சிதம்!”

அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

“ஜமீன் மாளிகையில் ஒரு நாளைக்கு ஆடிவிட்டால் நம்ம தரம்

— 8ம் பக்கம் —

இவர் தான்

எம். ஜி. ஆர்.

6-9-58ம் தேதி இதழில்

ஆரம்பமாகிறது!

கோபால் நாயக்கனுக்கு, ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்ருகிவிட்டது. தங்கை பற்றிய பேச்சை எடுத்தால், வீரத்தேவன் அனைத்தையும் மறந்துவிடுவான்; அவ்வளவு பிரியம் வைத்திருந்தான் தங்கை கண்ணுத்தாளிடம். ஆறு மாதங்களுக்கு முன்னுல், சிவகெங்கையை அடுத்த நாட்டரசன் கோட்டையில் தன் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த கண்ணுத்தாள், இனந்தெரியாத சிலரால் தூக்கிச் செல்லப்பட்டாள். வீரத்தேவன் அப்போது வீட்டில் இல்லை. பல்வேறு இளைஞர்களையும் சந்திப்பதற்காகப் பல ஊர்களிலும் சுற்றிக்கொண்டிருந்தான். தங்கள் குடும்பத்திற்கு எதிராக யாரும் சதிசெய்யக்கூடும், என்பதை அவன் கனவிலும் கருதியதில்லை.

பரம்பரையாக நாட்டு மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று வளர்ந்தது இராமலிங்கத் தேவர் குடும்பம். மறவர் நாட்டின் மாண்பினை வளர்த்தவர்களில் இராமலிங்கத் தேவர் முக்கியமானவர். அவர் உயிருடன் இருந்த காலத்தில், அவரைக் கண்டு அஞ்சாதார் இல்லை. வெளித்திண்ணையில்தான் படுத்துத் தூங்குவார். ஒரு குத்திட்டிகூட அருகில் வைத்திருக்கமாட்டார். அவ்வளவு பலம் பொருந்தியவர் அவர். அவரது மகளை ஒருவன் தூக்கிச் செல்லக்கூடும் என்று யார் நினைக்க முடியும்! வீரத்தேவனுக்கும் அந்த எண்ணம் வராததில் வியப்பில்லை.

நாட்டரசன்கோட்டை நகரம், கண்ணுத்தாள் கடத்தப்பட்ட செய்தியைக் காலையில் அறிந்தபோது திடுக்கிட்டது. இராமலிங்கத்தேவர் இருந்திருந்தால் இப்படி நடக்குமா, என்று ஊர் முழுதும் பேசிற்று. அப்போது கடம்பூரிலிருந்த வீரத்தேவனுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. ஓடிவந்த வீரத்தேவன் துடித்தான். இது யார் செய்த சதி என்பதைக் கண்டுபிடிக்க அலைந்தான். நாட்டரசன்கோட்டை மக்கள் பரவலாகப் பேசிக்கொண்டதிலிருந்து, கண்ணுத்தாள் காணுமற் போனதற்குமுதல்நாள் ஒருவன் அவள் இருந்த வீட்டுக்கே வந்து அவள் தந்தையின் பெருமைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததாகவும்அன்றிரவு அந்த வீட்டு வெளித்திண்ணையிலேயே அவன் படுத்திருந்ததாகவும்தெரியவந்தது.வதந்திகள்சில வேறுமாதிரி இருந்தன. அவளே விரும்பி அவனேடு ஓடி இருக்கலாம் என்ருர்கள் சிலர். ஒரு சிறு சத்தம்கூட அன்றிரவு இல்லாததால் இந்த முடிவுக்கு வந்தார்கள் அவர்கள். வீரத்தேவன் அதை நம்பவில்லை. தன் சகோதரி ஒருவனை விரும்பினுல், அவனுக்கே அவளை மணமுடித்துத் தருவதாக, அவன் அவளிடம் வாக்குறுதி அளித்திருக்கிருன். அப்படியிருக்கும்போது, இரவில் அவள் ஓடிப் போக வேண்டிய அவசியம் என்ன வந்தது!

எவ்வளவோ முயன்றும் தன் தங்கையைக் கண்டுபிடிக்க அவனுல் முடியவில்லை. மூன்று மாத காலம் பைத்தியக்காரனைப்போல் அலைந்தான். தெளிவில்லாதிருந்த அவனை, புரட்சி மனத்தோடிருந்த இளைஞர்கள் தெளிய வைத்து மீண்டும் செயலில் ஈடுபட வைத்தார்கள். ஊமைத்துரை விடுதலை சம்பந்தமாக அக்கரையோடு அலைய ஆரம்பித்த வீரத்தேவன், தன் தங்கையின் நினைவைக் கொஞ்சம் மறந்திருந்தான். இப்போது கோபால நாயக்கன் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டான்.

கோபால நாயக்கன் இப்போது பேச்சை மாற்ற முயன்ருன். ஒட்டப்பிடாரம் கிராமத்திலிருக்கும் ஊமைத்துரை மனைவியின் கவலை படிந்த முகத்தை, வீரத்தேவன் கண்களுக்குக் கொண்டுவர அவன் விரும்பினுன். இளைத்துப் போன அவளதுவடிவையும், உண்ணுமலே காலங் கழிப்பதையும் 'அப்பா, அப்பா' என்று அலறும் ஊமைத்துரையின் குழந்தையையும் படம் படமாக விவரித்தான். அவன் முயற்சி வீண் போகவில்லை. இன்னெருவர் கவலையைப் பார்த்து, தன் கவலையை அகற்ற முயலும் மனிதகுணம் வீரத்தேவனிடமும் திரும்பியது. பின் இருவரும் எழுந்து, சுப்பா நாயக்கர் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

2

கண்ணுத்தாள் ரகசியம்

இது பாளையங்கோட்டை.

பரவிக்கிடக்கும் பழுப்புநிறக் கற்களும், பரபரப்பான ஆடவர்களின் போக்குவரத்தும், தந்தத்தை வெட்டிப் படைத்த சிலைபோல் கட்டுடலும் வாய்த்துக் குடமேந்திச் செல்லும் கன்னியரும், பசுமையான காய்கறிகளும், பசி என்று வந்தவர்க்குப் புசி என்று தரும் கருணை உள்ளம் கொண்ட முதியவர்களும் நிறைந்த பாளையங்கோட்டை இது.

அதோ தெரிவதுதான் சிறைச்சாலை. ஒரு கோட்டைக்குரிய பாதுகாப்புப் பலத்தோடு அமைக்கப்பட்டது அது. நான்கு பேர் கூடித் திறந்து மூடவேண்டிய அளவுக்குக் கனம்மிக்க

கதவுகள் கொண்டது. துப்பாக்கி சகிதம் அதைக் காவல் காத்துக் கொண்டிருக்கும் இருவரும் தமிழர்கள்தான். கும்பினியார் சார்பில் அவர்கள் அங்கே நிற்கிறார்கள். அதன் எதிரே இருக்கும் கிணறு ஊருக்குப் பொதுக் கிணறு ஆகும். அதன் அருகில் வந்து முடியும் மூன்று தெருக்களில், நடுத்தெருவில்தான் சிங்கத்தேவன் குடியிருக்கிறான். அந்தத் தெருவிலேயே உயர்ந்த வீடு அவனது வீடு. வளமாக வாழ்ந்த குடும்பத்தைச் சார்ந்தவன் அவன்.

ஒட்டநத்தம் கூட்டம் முடிந்த மறுநாள், அந்திபட்டு நான்கு நாழிகைகளுக்கெல்லாம் சிங்கத்தேவன் வீட்டிலிருந்து, சிப்பாய் ஒருவன் சிறைச்சாலையை நோக்கிக் கிளம்பினான். சுற்றுமுற்றும் பார்த்தபடி அவன் நடந்த விதம் அவனைக் கும்பினியாரின் சிப்பாய்களில் ஒருவனாக எண்ணச் செய்யாது. ஆனாலும் அவன் கும்பினிச் சிப்பாயாகத்தான் இருந்தான். சிறைச்சாலையின் கதவுகளுக்கு அருகே, இரண்டு விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. காவல்காரர்கள் ரோந்து பலமாக இருந்தது. எரிந்து கொண்டிருந்த விளக்குகள், ஒருவரை இன்னொருவருக்கு அடையாளம் காட்டக்கூடியவை அல்ல; சிறு மண்ணெண்ணெய் விளக்குகள்.

சிறைச்சாலைக் கதவருகே வந்தான் அந்தச் சிப்பாய். மெதுவாக அவனைப் பார்த்த ஒரு காவல் சிப்பாய், தன் கையிலிருந்த துப்பாக்கியை அவனிடம் கொடுத்துவிட்டு விடைபெற்றுக் கொண்டான். துப்பாக்கியைக் கொடுக்கும்போதே, வந்த சிப்பாயின் கையில் தன் வலது கைப் பெருவிரலால் ஏதோ எழுதினான் காவல் சிப்பாய். வந்த சிப்பாய் அதற்குப் பதிலாகத் தலையை ஆட்டிவிட்டு, கதவருகில் சென்று உட்கார்ந்தான். உடனே மிச்சமிருந்த காவலர்களில் ஒருவன், அவனைப் பார்த்து,'ஏம்ப்'பா வந்த உடனே உக்கார்ந்திட்டே? கொஞ்சம் எழுந்துநட' என்றான். 'அட, உட்கார்ந்தா என்ன, நடந்தா என்ன; எவனும் உள்ள வராமக் கண்டுபிடிக்கணும், அவ்வளவு தானே? அதை நான் கவனிச்சுக்கிறேன்; சும்மா இரு' என்று கூறிய புதுச்சிப்பாய், கதவிலேயே சாய்ந்துகொண்டான். சிறிதுநேரம் மௌனம்நிலவியது. பிறகு புதுச்சிப்பாய் தன் சட்டைப்பையைத் துளாவி, ஒரு சிறு சுருட்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, 'அண்ணாச்சி! வத்திப்பொட்டி இருக்கா?' என்று கேட்டான். நடந்துகொண்டிருந்த சிப்பாய், தன் பையைத்தடவிப் பார்த்துவிட்டு, 'இல்லை, இல்லை; அந்தா அந்த வெளக்கில பத்தவச்சுக்கோ!' என்றான். உட்கார்ந்திருந்தவன் எழுந்து, விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டான். நடந்த சிப்பாய் அவன் அருகில் வந்து திரும்பி நடந்தபோது, விளக்கிலிருந்த மண்ணெண்ணெய் கொஞ்சத்தை அவன் சட்டையில் ஊற்றிவிட்டான் புதியவன். பிறகு சுருட்டுப் பற்ற வைப்பது போல் ஜாடை காட்டிக்கொண்டிருந்தான். மீண்டும் பழையவன் அவன் அருகில் வந்து திரும்பிய போது விளக்கை அவன் சட்டையில் காட்டிவிட்டான் புதியவன்.

'நெருப்பு! நெருப்பு!' என்று சத்தம்.

பழையவன் துள்ளிக் குதித்தான். கூக்குரலிட்டான். அவன் ஆடையெல்லாம் நெருப்புப்பற்றி எரிந்தது. சிறைச்சாலைக்கு உள்ளிருந்த சிப்பாய்களெல்லாம், வேக வேகமாக சிறு கதவு வழியே ஓடிவந்தார்கள். மண்ணை அள்ளிப் போட்டு நெருப்பை அணைக்க முயன்றார்கள். ஒருவன்கூட சிறைச்சாலைக்குள் இல்லை. இதைப் பயன்படுத்திக் கொண்டு, புதியவன் சிறைச்சாலைக்குள் நுழைந்தான். நேரே ஊமைத்துரை அடைக்கப்பட்டிருந்த கொட்டத்திற்குச் சென்றான். தாடியும் மீசையுமாக, சிந்தனை தேங்கிய முகத்தோடு, சிறு விளக்கொன்றின் கீழே கற்படுக்கையில் அமர்ந்திருந்தான் ஊமைத்துரை.

'சாமி! சாமி!' என்ற குரல்.

திடுக்கிட்டு எழுந்தான். கொட்டத்துக் கதவின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டான்.

'யார்! யார், அது?'

'நான்தான் சாமி, சிங்கத்தேவன்!'

'நீயா? சிங்கத்தேவனா?... எப்படி உள்ளே புகுந்தாய், இந்த சிப்பாய் உடையில்? என்ன செய்தி?'

'இந்தச் சிறையை உடைக்கத் திட்டம் தயாராகிவிட்டது. ஒட்டநத்தத்தில் நேற்று வாலிபர்கள் கூடி முடிவெடுத்து விட்டார்கள். பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி சிறை உடைபடும்!'

'அப்படியா! வீரத்தேவன் எங்கே?'

'அவன்தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறான்!'

'ஒட்டப்பிடாரத்துக்குப் போனானா? வடிவைப் பார்த்தானா?'

'நானே போனேன். அம்மாவைப் பார்த்தேன். ஆறுதல் சொல்லிவிட்டு வந்தேன்.'

'சரி; சீக்கிரம் போய்விடு. நீயும் அகப்பட்டுக் கொள்ளாதே!'

'போகிறேன். பிப்ரவரி இருபதாம் தேதி; நீங்களும் தயாராக இருந்துகொள்ளுங்கள்!' என்று கூறிய சிங்கத்தேவன், ஒவ்வொரு கொட்டத்துக்கும் 'படபட'வென்று சென்று, 'பிப்ரவரி இருபதாம் தேதி சிறையை உடைக்கிறோம்; தைரியமாய் இருங்கள்!' என்றான். கொட்டங்களில் இருந்தவர்கள் அவன் முகத்தைச் சரிவரப் பார்ப்பதற்கு முன்பாகவே திரும்பி நடந்தான். கதவருகில் வந்தான். அங்கே நெருப்புக் கலவரம் இன்னும் முடியவில்லை. வெந்துபோய்க் கிடந்த சிப்பாய், வேதனை

முனகலோடு, 'யாரோ கட்ட பொம்மன் கூட்டத்தைச் சேர்ந்தவன் சிப்பாய் வேஷத்தில் வந்திருக்கான். அவன் தான் இப்படிப் பண்ணினன். விடாதிங்க, பிடாதிங்க...' என்ருன். இதற்குள் வெளிப்புறத்துக்கு வந்துவிட்டான் சிங்கத்தேவன். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பதுங்கிப் பதுங்கி நடக்கலானன். சிப்பாய்கள் திரும்பிப் பார்த்தார்கள். சிங்கத்தேவன் ஓடத் தொடங்கினன். சிப்பாய்கள் துரத்தினர்கள். சிங்கத்தேவன் தன் வீட்டுப் பக்கம் செல்லாமல், வேறு பல தெருக்களைக் கடந்து ஓடினன். சிப்பாய்கள் விடாமல் துரத்தினர்கள். ஆங்காங்கே போய்க்கொண்டிருந்த பொதுமக்கள் இதில் ஈடுபாடு கொள்ளாமல் வேடிக்கை பார்த்தவண்ணம் நின்றனர். ஒரு சிப்பாய் ஓடுகிருன்; மற்ற சிப்பாய்கள் ஓடுகிருர்களே, ஏன்?- என்று அவர்களுக்கு ஆச்சரியம். கும்பினியிடம் வேலை பார்க்கும் கூலிச் சிப்பாய்கள், தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்கிருர்கள்போலும் என்று அவர்கள் எண்ணினர்கள்.

வேகமாகஓடியசிங்கத்தேவன், ஒரு தோட்டத்துச் சுவரில் ஏறிக் குதித்தான். அது ஒரு வீட்டின் பின்பகுதி. பின் கதவைத் தள்ளினன். தாழிடப்படாத அந்தக் கதவு திறந்துகொண்டது. 'பளிச்' சென்று புகுந்து, உட்புறம் தாழ் போட்டுக்கொண்டான். உடனே 'கிச்' என்று ஒரு சத்தம். சத்தம் வந்த திசைக்குத் தாவிய சிங்கத்தேவன், அப்படிக் கூக்குரலிட்ட பெண்ணின் வாயைப் பொத்தினன்.

'சத்தம் போடாதே! நான் கும்பினிச்சிப்பாய் அல்ல. மாறு வேடம் பூண்டிருக்கிறேன். கும்பினிச்சிப்பாய்கள் என்னைத் துரத்துகிருர்கள். என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே!' என்று கெஞ்சியபடி, தன் தலைக்கட்டை அவிழ்த்தான். சிறிது சிறிதாகப் பயம் தெளிந்த அந்தப் பெண், அவனை அடையாளம் தெரிந்துகொண்டு, 'உட்காருங்கள். நான் பயந்தே போனேன். என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? ஏழாயிரம் பண்ணை ரங்கைய நாயக்கரின் மகள் சுப்பம்மா நான்' என்ருள். அந்த நேரத்திலும், ரங்கைய நாயக்கரைப் புரிந்துகொள்ள அவனுல் முடிந்தது. ஸ்ரீவைகுண்டம் நெற்கொள்ளையில் சம்பந்தப்பட்டு மோதுதலில் கொல்லப்பட்டவர் அவர். சிங்கத்தேவன் அவர் வீட்டிற்கே ஒருமுறை சென்றிருக்கிருன்.

'அப்படியா!' என்ருன் சிங்கத்தேவன்.

'ஆமாம்!'

'இங்கே எங்கே வந்தாய்? இது யார் வீடு?'

'இது என் சகோதரி வீடு. அவர்களெல்லாம் திருநெல்வேலிக்குக் கூத்துப் பார்க்கச் சென்றிருக்கிருர்கள். ஊமைச் சாமியைக் கொன்றுவிடப் போவதாக, ஊரிலே பேசிக்கொண்டார்கள்; ஒரு தடவையாவது அவர் முகத்தைப் பார்த்துவிடவேண்டுமென்று வந்தேன். இங்கே வந்ததும்தான், அப்படி எதுவும் இல்லை என்று தெரிந்தது. நாளை காலையில், கிழங்கு விற்பவள் போலச் சிறைச்சாலைக்குச்செல்லலாம் என்றிருக்கிறேன்.'

'வேண்டாம். இன்னும் சில நாட்கள் போனல், சாமி 'ஜாம், ஜாம்' என்று வெளியிலே வந்துவிடுவார். அதன் பிறகு பார்க்கலாம்' என்ருன் சிங்கத்தேவன்.

'எத்தனைந்தேதி, விடுதலை?' என்று கேட்டாள் அவள்

'விடுதலைஅல்ல; மீட்பு. பிப்ரவரி மாதம் இருபதாம்தேதி, இந்தச் சிறைச்சாலையை உடைத்து சாமியை விடுதலை செய்யப் போகிருேம். அதைத்தான் இப்போது மாறு வேடத்தில் போய், சாமியிடம் தெரிவித்துவிட்டு வந்தேன்' என்ருன் சிங்கத்தேவன்.

'ஐயய்யோ! இருபதாம்தேதி, ஏழாயிரம் பண்ணையில் எனக்கு கல்யாணம் ஆயிற்றே!' என்ருள் அவள்.

'அட! அதற்கிடையிலா இங்கே வந்தே? ஊமைத் துரையிடம் உள்ள அன்பு, உன்னை இவ்வளவு தூரம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது!' என்ருன் சிங்கத்தேவன்.

'என்னைக் கட்டிக்கொள்ளப் போகிறவர்கூட உங்கள் கூட்டத்தில்தான் இருக்கிருர்' என்ருள் அவள்.

'அவன் பெயர் என்ன?' என்று கேட்டான் அவன்.

பக்கத்திலிருந்த ஒரு பொம்மையைச் சுட்டிக் காட்டினள் அவள்.

'ஓ! பொம்மையாவா? மிக நல்லவன். வீரன்' என்று பலபட அவனைப் புகழ்ந்தான் சிங்கத்தேவன்.

'உட்காருங்கள் அண்ணச்சி. நின்றுகொண்டே பேசிக்கொண்டிருக்கிறீர்களே!' என்ருள் அவள், அன்போடு.

'பட, பட'வென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. ஒவ்வொரு வீடாகப் புகுந்து துளாவிய சிப்பாய்கள் அங்கேயும் வந்து கதவைத் தட்டினர்கள்.

சிங்கத்தேவன்திடுக்கிட்டான். சுப்பம்மா உடனே 'சிப்பாய் உடைகளைக் கழட்டுங்கள்; கழட்டுங்கள்' என்று அவசரப்படுத்தினள். ஒரு போர்வையைஎடுத்து அவனிடம் கொடுத்தாள். அதைக் கட்டிக்கொண்டு, சிப்பாய் ஆடைகளைக் கழற்றி அவள் கையில் கொடுத்தான் சிங்கத்தேவன். அதைக் கையில் வாங்கிக்கொண்ட சுப்பம்மா, கொண்டுபோய் ஒரு பானையுள் போட்டு மூடிவிட்டு, ஒரு பாயை எடுத்து விரித்து சிங்கத்தேவனைப் படுக்கச் சொன்னள். ஒன்றும் புரியாத சிங்கத்தேவன் அதில் படுத்தான்.

தொடரும்

வெண்பாப் போட்டி-25.

ஈற்றடி :

சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

முடிவு தேதி 6-9-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

குறைந்தாவிடும்! குமரப்பர் கோபித்துக்கொள்வாரே என்கிருய், இல்லையா? நீ என்ன பணத்திற்காகவா ஆடுகிருய்! குருவுக்கு தட்சணை வாங்கிக் கொடுக்கிருய். இது பாபமில்லையே! துரோகமில்லையே! தோகைமயிலைப்போல் நீ இருக்க, விஜய ரகுநாதரிடம் வேருெருத்தி பரிசு பெற்ருல் உனக்கு அவமானம் இல்லையா? நன்ருக யோசித்துப் பார் ரஞ்சிதம்! கங்கைமுத்து மெத்தக் கடினப்பட்டு வாழ்க்கை நடத்துகிருர். எனக்காக நீ ஒப்புக்கொள்ள வேண்டும் ரஞ்சிதம். தட்டக் கூடாது'' என்று கோபாலகிருஷ்ணன் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு சொன்னர்.

''என்னை மன்னிக்க வேண்டும். வேறு எந்த உதவி வேண்டுமானலும் செய்கிறேன். உங்கள் சொல்லை நான் ஒருபோதும் தட்டமாட்டேன். என் அன்னையார் சொன்ன வாக்குறுதி 'நமது பரம்பரை அழியும்வரை கோபாலகிருஷ்ணருக்கு துரோகம் செய்யக் கூடாது' என்று சொன்னதுதான். அதை நான் நிறைவேற்றத் தவறவேமாட்டேன். உங்களுக்குத் தெரியாத யோசனையில்லை. நாட்டியமே ஆடுவதில்லை என்ற உறுதியோடு குமரப்பர் என்னை மணந்தார், அதை மீறினல் துரோகமில்லையா? அவர் என்னை மதிப்பாரா? என் வாழ்க்கை படுசூரணமாகிவிடாதா? நான்வாழ்க்கையின் முதற் கட்டத்திலே நிற்கிறேன். மகரந்தம் உதிராத மலர் நான். ஜமீன் மாளிகையில் ஆடினேன், ஜமீன்தார் பாராட்டினர் என்று குமரப்பருக்குத் தெரிந்தால் அவர் என் படி வாசல் ஏறமாட்டார். பிடி சாம்பல் ஆகும்வரை என்வாழ்வு அஸ்தமித்தது என்றுதான் அர்த்தம். என்மீது எனக்கில்லாத அக்கரை தங்களுக்கு உண்டு. நீங்களே இப்படி சொன்னல் நான்யாரிடம்சொல்லி நோவது. என் ஆசானுக்கும் எவ்வளவு பணம் வேண்டுமானலும் தருகிறேன் என்று சொன்னேன். அவரோ நான் ஆடியே தீர வேண்டும் என்கிருர். பணம் சேர்க்கும் காலம் என் அன்னையோடு முடிந்தது. நான் வாழத்துடிக்கிறேன். கௌரவமாக வாழத் துடிக்கிறேன். எனக்குப் பிறகு எனது சந்ததியினர் சமுதாயத்தில் சம அந்தஸ்துப் பெற வேண்டும் எனக் கனவு கண்டுகொண்டிருக்கிறேன். அன்புகூர்ந்து அதைக் கெடுத்துவிடாதீர்கள்''

''சின்னக் குழந்தைமாதிரி பேசுகிருய். நீ ஆடினல் கௌரவம் கெட்டுவிடுமா என்ன?''

''உண்மைதான், ஆடுகிறவர்களை, ஆடும்போது புகழும் மக்கள், அவர்கள் ஆடிமுடிந்து வீட்டுக்குப் போன பிறகு மதிப்பதில்லை. ஆடுகிறவர்களும் நல்ல பெண்கள்தான் என்று மதிக்கும் காலம் இன்னும் வரவில்லை''

''உன் அன்னைகூட என் சொல்லை இப்படி அவமதித்ததில்லை ரஞ்சிதம்!''

''அவர்கள் இப்படி ஒரு சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்டதில்லை. அவர்கள் காலம் வேறு. இந்தக் காலம் வேறு.''

''கடைசியாக என்னதான் சொல்கிருய் நீ!''

''என்னைக் கொன்றுவிடக்கூட அனுமதிக்கிறேன்...! இதற்குமேல் என்னை என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?'' என்ருள் ரஞ்சிதம்.

கோபாலகிருஷ்ணன் பிள்ளைக்கு மனதில் சுருக்கென்று தைத்தது.

''ரஞ்சிதம்! இந்தக் கோபாலகிருஷ்ணன் உங்கள் குடும்பத்திற்குச் செய்த உதவிகளையெல்லாம் மறந்துவிடாதே! ஒரு ஜமீனையே அரித்துத் தின்ற கரையான் என்னும் அபகீர்த்தியைப்பெற இருந்த உன் அன்னை செங்கமலத்தின் மானத்தைக் காப்பாற்றியது யார் என்று யோசித்துப்பார்! அது உனக்குத் தெரியாத கதை இல்லை. பலபேர் உனக்குச் சொல்லியிருப்பார்கள்.' என்று ஆணவத்தோடு சொல்லிவிட்டு கோபாலகிருஷ்ணன் வெளியேறினர். பரிமாறிய பலகாரம் ஈ மொய்த்துக் கிடந்தது. கொட்டிய நெய் வழிந்தோடியது. ரஞ்சிதம் சிலையாக நின்ருள்.

முப்பதாண்டுகளுக்குமுன் சிவகங்கை ஜமீனுக்கும் ரஞ்சிதத்தின் அன்னைக்கும் நடந்த வழக்கு அவள் நினைவுக்கு வந்தது.

(தொடரும்)

★
எங்கும் கிடைக்கும்.

★

பைபிளில் மூழ்கி கர்த்தரைக் காணத் துடித்தவர்கள் காதலில் மூழ்கினர்!

★

"நான் கண்டு மகிழ்ந்த இனிமையான கனவு ஒன்றின் சடலம், இங்கே அடங்கிக்கிடக்கிறது!"- இப்படி எழுதப்பட்டிருந்தது. அந்தக் கல்லறையின்மேல், பளபளப்பான சலவைக்கல்லின்மேல் தோண்டிச் செதுக்கப்பட்டுப் பொன் மெருகிட்டிருந்த அந்த முத்துப்போன்ற எழுத்துக்கள், மின்னிச் சுடர்வீசின.

உதயநிலா அப்போது தான் உயரக் கிளம்பிக்கொண்டிருந்தது. மாலைக் காற்றை மாந்திக் குடித்தவாறு, நான் அந்த மயானபூமியின் தெற்குச் சுவரோரத்தேயமைந்திருந்த மணல்மேட்டில் அமர்ந்திருந்தேன். வழக்கம் போலவே, அன்றும், அருளானந்தம் வந்து, அந்தக் கல்லறையின்முன் குனிந்து முழந்தாளிட்டுக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தான். கடந்த ஒரு வார காலமாக, அதாவது, அந்தக் கல்லறைக் காவியத்தின் கதாநாயகியான மேரி, உயிரோடு உலவிய கடைசி நாள்முதல், நான் அவனைக் கவனித்து வருகிறேன்!...தினமும் இப்படியே இருட்டியதும் வந்து, இதயம் நொந்து அழுகிறான்.

அருளானந்தம், அத்தியட்சகர் ஞானமணியின் ஒரே மகன். அவனுடைய தந்தை, தன்னைப் போலவே தன் மைந்தனையும் அத்தியட்சகர் வேலைக்குப் படிக்க வைத்தார். அவர்களுடைய குடும்பமே பரம்பரை பரம்பரையாகப் பக்தி மார்க்கத்தில் சிறந்து விளங்கி வந்தது. அந்தக் குடும்பப் புகழைத் தன் குமாரனின்மூலம் குன்றின் மேலிட்ட விளக்கென ஆக்கிக் குவலய முழுதும் அதைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்று பெரு விருப்புக்கொண்டார் ஞானமணி. அதன் விளைவு?...அருளானந்தம் பிரம்மச்சாரியாக்கப்பட்டான். வேதக் கருத்துக்கள் அவன் மூளையில் வற்புறுத்தித் திணிக்கப்பட்டன. நாளடைவில், அவனும், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை!" என்று, அவர் காட்டிய வழியில் சென்று, ஊட்டிய ஞானத்தை உளமாறக் கற்று, புகழ்க் கன்னியின் புன்னகையை நோக்கித் "தவம்" கிடந்தான்.

அத்தியட்சகருக்கு வயது அறுபதுக்கு மேலாகிவிட்டது. எனவே, தனக்குப் பதிலாக அருளானந்தத்தையே தன் ஆசனத்தில் அமர்த்திவிட்டார். பதவியேற்பு நாளன்று, மாதா கோவிலில், மௌனமாகக்கூடியிருந்த பெரிய ஜனத்திரளின் மத்தியில், கொஞ்சங்கூடக் கூச்சமின்றி அவன் கொட்டிய ஞான உபதேசக் கருத்துக்கள்...! அப்பப்பா! அதைக் கேட்டு, விழாவிற்குத் தலைமை தாங்க வந்திருந்த "பிஷப்" கூட அயர்ந்துவிட்டான். அது அவனுடைய வெற்றிப்பயணத்தின் முதற்படியாகவே அமைந்துவிட்டது எனலாம். கூட்டம் முடிந்தவுடன், பெரிய பெரிய மனிதர்களெல்லாம் ஓடிவந்து, அவன் கையைக் குலுக்கி, தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர். தனயனின் புகழ்கண்டு தந்தையின் உள்ளம் பூரிப்பால் விம்மியது.

அருளானந்தத்தின் நெஞ்சிலும், அன்றுமுதல், ஆசைக்கனல் மின்னி எழ ஆரம்பித்தது. "இன்று ஒரு நாளிலேயே இவ்வளவு புகழென்றால், இன்னும் போகப்போக, எவ்வளவு புகழ் நம்மை வந்தடையும்?" என்று எண்ணத் தொடங்கினான்.

அவனுடைய கையால் "ஞானஸ்தானம்" பெறுவதற்கும், திருமணம் செய்துகொள்வதற்கும், மக்கள் துடியாய்த் துடித்தனர்; அதை ஒரு பெரிய பாக்கியமென்று கருதினர் சொல்லப் போனால், அருளானந்தம் ஒரு மனிதனாக அல்ல, மகானாக மதிக்கப்பட்டான்.

போன வாரம், ஞாயிற்றுக்கிழமை மாசிலாமணி என்பவனுக்கும், மேரி என்பவளுக்கும், அருளானந்தத்தின் முன்னிலையில், மாதா கோவிலில் திருமணம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அருளானந்தத்தின் "வேத உபந்நியாசக் குழுவில்" மேரியும் ஒருத்தி. அவனுடைய அன்புக்குரிய மாணவி, ஆகவே, அன்று ஆலயத்தில் அலங்காரம் அற்புதமாகயிருந்தது. மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் பெருத்த பணக்காரர்கள்; தடபுடலுக்குக் கேட்கவா வேண்டும்? ஏக அமர்க்களமாக எல்லாம் இனிதே நடந்தேறின. தாலி கட்டும் சமயம் நெருங்கியது. அருளானந்தம், பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் "தேவபானம்" வழங்கிவிட்டு, தாலியை எடுத்து, மாசிலாமணியிடம் கொடுத்து, கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கட்டச் சொன்னான். அவனும் அவ்வாறே செய்தான். இருவரையும், "இனிதே வாழ்க!" என்று வாழ்த்திவிட்டு, தன் இருப்பிடம் செல்லத் திரும்பினான் அருளானந்தம். திடீரென்று, மேரி மாரடைப்பால் மூச்சு நின்று, "தடாலென்று" தரையில் சாய்ந்தாள் பிணமாக!...அருளானந்தம் செய்வதின்னதென்றறியாது, அப்படியே சிலைபோல நின்றுவிட்டான். அவனுடைய கண்களிலிருந்து சூடான நீர் முத்துக்கள் சோகத்தின் பிரதி பலிப்பாக வெளியேறிக்கொண்டிருந்தன. மாப்பிள்ளை மாசிலாமணி, அந்த மாசறு பொன் மேனியாள் மீது வீழ்ந்து கதறியழுதான். அவனுடைய ஆசைக் கனவுகள் அரைநாழியில் அழிந்து மறைந்துவிட்ட துர்ப்பாக்கியத்தை எண்ணிச் சபையே கண்ணீர் வடித்தது; அதில் நானும் ஒருவன்.

பள்ளியறை சென்றுபார்த்தாவுக்கு விருந்தாக வேண்டிய பாவை மேரியின் பளிங்கு நிகர் உடல், கள்ளியும் காளானும் முளைத்துக் கிடக்கும் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது, கரையான்களுக்கு விருந்தாக! அந்த அழகு ராணியின் உடலை அடக்கஞ் செய்யும்போது, மாசிலாமணி அழுதுகொண்டிருந்தான். அருகில் நின்ற அருளானந்தத்தைப் படிக்கச் சொல்லும்பொழுது, தன்னால் இயலாதென்று கூறிவிட்டான். அவ்வளவு தூரம் அவன் கவலையில் ஆழ்ந்து போயிருந்தான்.

நான் அவனை அப்போது கூர்ந்து கவனித்தேன். யாரோ ஒருத்திக்காக, இவன் ஏன் இவ்வளவு வருத்தப்பட வேண்டும்?..."மாணவியின் மேல் எத்தனை அன்பு!" என்றனர் மற்றவர்கள், ஆனால், எனக்கு அது புரியாத புதிராகவேயிருந்தது. இவர்களுக்குள் "ஏதோ ஒன்று" இருக்க வேண்டும் என்று கருதினேன். இப்போது அந்தச் சந்தேகம் என்னுள் வளர்ந்து, வலுப் பெற்றுவிட்டது. எதற்கும், அவனிடம் இன்று நேரடியாகவே கேட்டுவிடுவதென்ற தீர்மானத்துடன், கல்லறையைக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருந்த அருளானந்தத்தை நெருங்கினேன். "அருள்!" என்றேன் மெல்லிய குரலில். அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். ஒருவேளை, அவன் என்னை, "மாப்பிள்ளை மாசிலாமணிதான் வந்துவிட்டானோ?" என்றெண்ணித்தான், அப்படி மனப் பதட்டம் அடைந்திருப்பானோ?... அடையாளங் கண்டுகொண்டவுடன், என்னை ஒரு வறட்சியான புன்னகையால் வரவேற்றான்.

நான் அவனுடைய விசனத்திற்கான விபரத்தை மெள்ள விசாரித்தேன். முதலில் மழுப்பினான். "அழகும், அறிவும் ஒருங்கே அமையப்பெற்ற ஆண்டவனின் அற்புதமான படைப்பு ஒன்று அழிந்துவிட்டதே என்று அழுகிறேன்!" என்றான். அந்தப் பதில் எனக்கு அவ்வளவாகத் திருப்தியளிக்கவில்லை. மீண்டும் கேட்டேன். தண்ணீர் காணுமட்டும் தரையைத் தோண்டுவதைப்போல எளிதில் அவன் தன் இதயத்தை என்னிடம் திறந்துகாட்டுவதாகயில்லை. எழுந்துபோய்விடக்கூட எத்தனித்தான்; நான் விடவில்லை. எனக்கும், அவனுக்கும் பள்ளியில் படிக்கும்போது, கொஞ்சம் நெஞ்சங் கலந்த நட்பு! அந்த உரிமையைக் கொண்டு, அவனை நான் துருவித் துருவிக் கேட்டேன்.

அப்போது, இடுகாட்டிலிருந்து பத்தடி தூரம் அப்பால் அமைந்திருந்த தண்டவாளத்தில், தெற்கு நோக்கி ஒரு வண்டி பலத்த இரைச்சலுடன் சென்று மறைந்தது. கண்ணீர்க்கண்களால் அதைக் கண்ட அருள், என்னிடம், "இன்னும் சற்றுநேரத்தில் வடக்கே போகிற வண்டியொன்று வருமல்லவா?" என்றான்.

ஆமாம். ஒருமணி நேரத்தில் வரும். ஏன்; எங்கேனும் ஊருக்குப் போகவேண்டுமா?" என்றேன் நான்.

"ஆம். அதுவும் ஒரு ஊர்தான்!" என்று, அவன் எனக்குப் பதில் சொல்வதுபோலல்லாமல், தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

பலத்த பீடிகைக்குப் பின்னால், அவனும் ஒருவாறு சொல்ல ஆரம்பித்தான். "நண்பா! நான் உன்னிடம் சொல்லப்போகும் இந்தக் கல்லறைக் காவியத்தின் மூலக்கரு, என்னிடமிருந்துதான் உற்பத்தியானது. இந்த இரகசியத்தை நீ வெளியில் யாரிடமும், இன்னும் ஐந்து வருடங்களுக்குச் சொல்வதில்லையென்று, முதலில் எனக்கு உறுதி தரவேண்டும்!" என்றான் அருள். நானும் சரியென்று ஒப்புக்கொண்டேன்.

"புறத்தில் நிகழ்ந்தன யாவும், உனக்கு நான் சொல்லாமலே தெரியுமென்று நினைக்கிறேன். என் தந்தையின ஆவலும், அதற்கேற்ப நான் படித்துப் பட்டம்பெற்றுப் பலர் போற்றப் "பவிஷாக'ப் பதவியேற்றதும், நான் அமைத்த "வேத உபந்நியாசக் குழுவும்," அதில் சேர்ந்து "ஞானம்" பெற்றவர்களில் இந்த மேரியும் ஒருத்தி என்பதும், அப்புறம் இவள் கல்யாணத்தன்று நடைபெற்ற கருமாதிச் சடங்கும்- உனக்கு மட்டுமல்ல, ஊர் முழுக்கத் தெரிந்த விஷயம்தான். மேரி மாரடைப்பால் இறந்தாள்!-என்றுதான் எல்லோரும் எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். நான் வழங்கிய "தேவபானத்தில்" ஏதேனும் இருக்குமோ-எனச் சந்தேகப்பட்ட சிலர், பாவம், சோதனைக்குப் பின்னர், சோர்ந்து போனதுமட்டுமல்ல, பரமனின் சீடனை என்மீது வீண்பழி சுமத்தியதற்காகப் பெரியோர்களின்கோபத்திற்கும் ஆளாயினர்.

ஆனால் உண்மை என்ன? அதற்கு என்றுமே அழிவில்லை. நாம் எவ்வளவுதான் ரகசியமாகப் பொய்யை மூடிப் பாதுகாத்து வைத்தாலும், உண்மை எப்படியோ அதன் மென்னியைப் பிடித்து இழுத்து வந்து, வெளியில் நிறுத்திவிடுகிறது.

நான் என்னோடு இந்த ரகசியத்தையும் சேர்த்துச் சாகடித்துவிடலாமென்றுதான் நினைத்தேன். அதற்காகவே எவ்வளவோ பத்திரமாக நடந்துகொண்டேன். ஆனால், என்னையும் ஒரு "வேவுகாரன்" போல் நீ கவனித்து வந்திருக்கிறாய். இப்போதுகூட, நான் இதைஉன்னிடம் கூறாமலேஇறந்துவிடலாம்! இல்லை, இல்லை; இருந்துவிடலாம். ஆனால அநியாயமாக ஒரு பெண்ணைச் சாகடித்த பாவத்தைச் சுமப்பதோடு மட்டுமல்ல, இயற்கை நியதிக்கு விரோதமான, அநீதியின் செழிப்பிற்கு அஸ்திவாரமிட்டவனுமாவேன். உண்மையின் உதிரத்தை உறிஞ்சியெடுத்துப் பொய்க்குப் புத்துயிரளிக்க என் மனசசாட்சி இடந்தரவில்லை.

சொல்லுகிறேன் கேள், அந்தச் சோகக் கதையை, மேரி என்னுடைய மாணவிமட்டுமல்ல, காதலியுங்கூட! அத்தியட்சகரின் அந்தரங்க வாழ்க்கையை நினைத்து ஆயாசப்படுகிறாயா நண்பா? கட்டைப் பிரம்மச்சாரிக்குக் காதல் வேறா?—

என்றுதானே யோசிக்கிருய்?... என்ன செய்வது? நானும் எவ்வளவோ தூரம் என்னுடைய உணர்ச்சிகளுடன் போராடித்தான் பார்த்தேன். அவளைக் காணும் போதெல்லாம் என் கண்களை மூடிக்கொள்வேன்! ஆனல், மூடிய கண்ணிமைகளின் முன்னேயும் அந்த அழகியின் கோமள உருவம் கூத்தாடிச் சிரிக்கும். வேதத்தின் உட்பொருளை விளக்கிகொண்டிருப்பேன்; அப்போது அந்த வேல்விழியாளின் பார்வை, என் நெஞ்சில் ஏதோ ஒரு வெறி கலந்த வேட்கையை உண்டுபண்ணும்.

பல பெண்கள் என்னிடம்வேதம் பயின்றனர். எல்லோரும் வகுப்பு முடிந்து செல்லும்போது, கரங்கூப்பி என்னை வணங்கி விடைபெற்றுச் செல்வர். ஆனல், அவள் மட்டும், போகும்போது, சற்றுப்பின் தங்கி நின்று ஒரு புன்னகையைச் சிந்தி, என் உள்ளத்தைப் புண்ணக்கிவிட்டு "வருகிறேன் அருள்!" என்பாள் குயிலினுமினிய குரலில். "கடவுளின்மீது மட்டுமே கவனம் செலுத்தவேண்டும்" - என்ற கட்டாயத்தின்பேரில், கரை காண முடியாத புகழாசையின்மீது வளர்க்கப்பட்டிருந்த என் களங்கமற்ற உள்ளத்தில், காதல் என்ற கல் விழுந்து, சலனமற்றிருந்த என் நெஞ்சைச் சஞ்சலத்திற்குள்ளாக்கி விட்டாள் அவள். உணர்ச்சிக் கொந்தளிப்பின் உத்வேகச் சுழற்சியில் நான் சுருண்டு விழுந்து, சுயபுத்தி இழந்து, தவிக்கலானேன். அவளைத் தனியாகச் சந்தித்து இன்பமுறச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி, ஏங்கிக் கிடந்தேன்.

"பிற பெண்களை இச்சையோடு நோக்குவதுகூடப் பாவம்!" என்ற இயேசுவின் மொழியை நினைவுறுத்தி, என் மனச்சாட்சி என்னை அச்சுறுத்தியது. அப்போதே, அவசர அவசரமாக வேதநூலை எடுத்து, என் மனதை ஆண்டவன்பால் திருப்புவதற்காக, அதை வாசிக்கத் தொடங்கினேன். அதன் முதல் அத்தியாயத்திலேயே, "அகிலத்தைப் படைத்த ஆண்டவன், அதனை ஆள்வதற்காக, ஆதாம் என்ற மனிதனைப் படைத்தான். சிலநாள் கழித்து, தனியே அவன் தவிப்பதைக் கண்டு, அவனுக்குத் துணையாக, ஆதாம் நித்திரையிலிருந்தபோது, அவனுடைய விலா எலும்பில் ஒன்றை எடுத்து, அதற்குப் பெண்ணுருக் கொடுத்தான். அந்த எழிலரசி ஏவாள், ஆதாமின் ஏகாந்தத்தைப் போக்கி, அவனுக்கு ஆனந்தமளித்தாள்!" என்று எழுதியிருந்தது. இப்போது என் வெறி, முன்னிலும் பன்மடங்கானது. அதற்கேற்றாற்போலச் சந்தர்ப்பமும் ஒரு நாள் வழி திறந்துவிட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமை; புனிதமான நாள்! என்னுடைய "வேத உபந்யாசக் குழுவினருக்கு" அன்று ஒருநாள் மட்டும் விடுமுறை தரப்பட்டிருந்தது. நான் தனியே என் அறையில் அமர்ந்து, வேதம் வாசித்துக்கொண்டிருந்தேன். மேரி, அதற்கு ஆறுநாட்கள் முன்னதாகவே வேற்றூர் சென்றுவிட்டாள். எனவே, அவளுக்கு அன்று விடுமுறையென்பது தெரிந்திருக்க நியாயமில்லை: ஆகவே, அவளும் வரமாட்டாள் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனல், நான் ஆச்சரியப்படத்தக்க வகையில் - அல்ல, ஆனந்தப்படத் தக்க முறையில், திடீரென்று, என் முன்னே வந்து நின்ருள். அவளைக் கண்டதும், என் நரம்புகளில் ஏதோ மின்சாரம் பாய்வது போன்ற உணர்வு ஏற்பட்டது.

"இன்று விடுமுறை என்பது உனக்குத் தெரியாதா?" என்றேன்.

"நான் இப்போதுதான் ஊரிலிருந்து வந்தேன். வந்தவுடன், வகுப்புக்கு நேரமாகிவிட்டதேயென்று, ஓடோடி வந்துவிட்டேன்" என்ருள்.

உட்காரச் சொன்னேன். மறுப்புக் கூருமல், மௌனப் புன்னகையால் என் மனதை அறுத்துக்கொண்டே அமர்ந்தாள். பாதரச விளக்கொளியில், பால்போல் துலங்கிய அவளின் பாங்கான உடலைப் பார்த்துப் பெருமூச்செறிந்தேன். திடீரென்று விளக்குகள் அணைந்தன!... அவள் அச்சத்தால் துள்ளியெழுந்து, "அருள்!" என்று கூவிக்கொண்டு, ஓடி வந்து, என்னிடம் ஒண்டிக்கொண்டாள். அந்தப் பட்டு உடலை நான் தொட்டணைத்துக்கொண்டே, "பயப்படாதே; 'பைகாராவில்' ஏதாவது பழுது ஏற்பட்டிருக்கும்!" என்றேன். நான் சொல்லி முடிப்பதற்குள், மீண்டும் விளக்குகள் எரியத் தொடங்கின. என் பிடியிடைச் சிக்கியிருந்த அந்தக் கொடியிடையாளின் கண்கள், வெளிச்சத்தில் எனைக் கண்டு நாணிக் கூசின. அந்தமட்டில், அவளே ஓடிப் போய் விளக்கை அணைத்துவிட்டு வந்து; என் மார்பில் தன் மலர் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

பிறகென்ன?... இருவரும் கலந்தோம்; மகிழ்ந்தோம்; புகழில்,



பொருளில், வேதத்தில், தேவகீதத்தில், எதிலுமே காணுத இன்பத்தை, அவள் எனக்குத் தந்தாள். போதை தெளிந்ததும், அவரவர் பாதை நோக்கிப் பிரிந்தோம். ஆனலும் நெஞ்சில், நினைவின் வாதை மட்டும் ஓடிக்கொண்டேதானிருந்தது.

விடிந்தது; உலகம் விழித்தெழுந்தது. நான் ஏதோ கனவு மயக்கத்தில் சுழல்பவனைப்போல, என் காரியங்களில் ஈடுபட்டேன். வீட்டுக்குப் போன மேரி, நடுவேளையில், நேரத்துக்குத் தகுந்த நெஞ்சுக் கொதிப்போடு, என்னிடம் ஓடோடி வந்தாள். "விஷயம் வெளியில்தெரிந்துவிட்டதோ" என்ற அச்சம் என்னைக் கலவரத்திற்குள்ளாக்கியது.

அவள் என்னிடம் ஒரு மண ஓலையைக் கொடுத்தாள்; பிரித்துப் பார்த்தேன். "மாசிலாமணிக்கும், மேரிக்கும், மாதா கோவிலில், அருளானந்தத்தின் முன்னிலையில், திருமணம் நடைபெறும்!" என்ற அதன் உட்கருத்தைக் கண்டு, என் முகம் கறுத்தது. பெருத்த மனவேதனையுடன் மேரியை நோக்கினேன். என் அனுமதி பெருமல், என் தந்தையின் சம்மதத்தின் பேரில், என் முன்னிலையில் திருமணம் நடத்த உத்தேசித்திருக்கிருர்கள் என்பதையும் அவளிடம் சொன்னேன். நான்தான் எப்போதும் என் தந்தையின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவனுயிற்றே!

"முன்பே எங்கள் வீட்டில், இது பற்றிப் பேச்சு நடந்தது. நான் பதிலேதும் சொல்லாமல், மௌனமாகவே இருந்து வந்தேன். அதை அவர்கள், 'மௌனத்தின் அறிகுறி சம்மதந்தானே!' என்று எண்ணிவிட்டார்கள். அதனுல்தான், நான் ஊருக்குப் போயிருந்த சமயம், என்னிடமும் ஒரு வார்த்தை கேளாமல், அவர்கள் இஷ்டத்துக்கு, என்னை மாசிலாமணியோடு பிணைத்துவிட, இவ்வளவு ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்து முடித்துவிட்டனர் என் பெற்ருேர், அருள், இப்போது நான் என்ன செய்யட்டும்? சொல்லுங்கள்!" என்று அழுதுகொண்டே கேட்டாள், அந்தத் தொழுது வணங்க வேண்டிய தூய்மை நிறை அழகின் முழு வடிவம். அவளை நான் எவ்வளவோ தூரம் சமாதானப்படுத்த முயன்றேன், முடியவில்லை.

அந்த மண ஏற்பாட்டை மாற்றியமைத்துத் தன்னை மணந்துகொண்டாலொழிய, தன் மனவேதனை தீராதெனக் கூறினுள். ஆனல், அது என்னுல் இயலாத காரியம்! என் தந்தையின் கட்டுப்பாட்டை மீறிச் செல்ல எனக்குத் துணிவில்லை. அதே நேரத்தில் என் "சொத்து," அயலான் ஒருவனுக்குச் சொந்தமாவதை, வெட்கங்கெட்டதனமாக ஏற்றுக்கொள்ளவும் எனக்கு விருப்பமில்லை. துளி இன்ப நுகர்விற்குப் பின்னுல், துன்பம் ஆழியென இரைவதைக் கண்டேன். "கண் குருடாகி விட்டதே வாலிபத்தின் வேகத்தை வசப்படுத்தமாட்டாமல்" என்றெண்ணி வருந்தினேன். ஒரே ஒரு கணம் யோசித்திருந்தால், உணர்வை அடக்கி வென்றிருக்கலாம்! என் செய்வது? கண் கெட்ட பிறகு கதிரவன் வணக்கம்!

என்னுடைய கோழைத்தனத்தைக் கண்டு கொக்கரித்துவிட்டுக் கடைசியில், அவளாகவே ஒரு முடிவுக்கு வந்தவளைப்போல, வீர ஒளி வீசும் தன் கண்களை நிமிர்த்தி என்னை ஏறிட்டுப்பார்த்தாள். அந்தப் பார்வை என்னைச் சுட்டெரிப்பதைப் போலிருந்தது. மனச் சாட்சியின் கோர சொருபத்தைக் கண்டு, அஞ்சி நடுங்கி, நான் தலை கவிழ்ந்தேன். சில விஞடிகள் கழித்து நான் நிமிர்ந்து பார்த்தபோது, அவள் என் முன் இல்லை; போய்விட்டாள்.

திருமண தினத்தன்று, மணவினைக்கு ஒரு மணி நேரம் முன்னதாக, அவள் என் அறைக்கு வந்தாள் - 'ஆசிரியரிடம் ஆசி பெற்று வருகிறேன்!' என்று அயலவரிடம் சொல்லிவிட்டு, என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தநும், உடனே போய்விட்டாள். பிரம்மச்சாரிஎன்ற பெயரில் உலவும் இந்தப் பித்தலாட்டக்காரனுடன் பேசக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லைபோலும்! அவளுடைய கண்கள் கலங்கியிருந்ததையும், கடிதத்தைக் கொடுக்கும் போது, அவள் கரம் நடுங்கியதையும் நான் கவனித்தேன். அதைவிடக் கடிதத்தில் நான் கண்ட வரிகள், என்னை நிலைகுலையச் செய்தன.

"அருள்! நான் எதிர்பார்த்தஇன்பம் எனக்குக் கிடைத்தது. ஆனல், வாழ்வு கிடைக்கவில்லை. ஆமாம். நான் ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டேன்!... இதனுல், தங்கள் மீது குற்றஞ்சாட்டுவதாக எண்ண வேண்டாம். ஒரு ஆணுக்கு எத்தகைய உணர்விருக்குமோ, அதே உணர்வுதான் பெண்ணுக்குமுண்டு. இதில் யாரைக் குறை கூறி, என்னபயன்? ஆனல், பெண்ணின் உள்ளம் விநோதமானது. பச்சை மரத்தில் பதிந்த ஆணியைப் பிடுங்க முடியாததைப்போல, மேன்மையான அவள் உள்ளத்தில், முதன் முதலாக, அதுவும் அவளின் பரிபூரண சம்மதத்தின்பேரில் குடிபுகுந்தவனை, அவளால் எப்படி முயன்றும் மறக்க முடிவதில்லை. ஆம், உங்களுக்குச் சொந்தமாகிவிட்ட என் இதயத்தை, இன்னொருவனுக்கு அடகு வைக்க நான் விரும்பவில்லை. ஒழுக்கம் என்ற ஒரு வார்த்தையின் புனிதத்தைக் காப்பதற்காக நான் உயிர் துறக்கச் சித்தமாகிவிட்டேன்.

-ஒரு மணி நேர அவகாசத்திற்குப் பின்னர், எந்தத் தொந்தரவுமின்றி உயிர் கொல்லும் விஷமொன்றை நான் ஏற்கனவே அருந்திவிட்டுத்தான்-வந்திருக்கிறேன். இதனுல், யாருக்கும் நம்மீது சந்தேகம் ஏற்படாது; நீங்கள் நிம்மதியாகயிருக்கலாம். நீங்கள் வாழ்க! உங்கள் புகழ் உயர்க!

பிரம்மச்சர்ய விரதத்தில் பிழையேற்பட்டுவிட்டதேயென்று மனம் பேதலிப்புற்றயராதிர்கள். என் நினைவு வந்தால், 'ஏதோ ஒரு 'இன்பக் கனவு' கண்டு, நித்திரை கலைந்ததும், அது மறைந்துவிட்டதாக எண்ணிக்கொள்ளுங்கள். வருகிறேன்-இல்லை, போகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் மேரி.

கடிதத்தை நான் படித்து முடிக்கும்போது, ஆலய மணி ஓங்காரமிட்டது என் உள்ளத்தின் எதிரொலிபோல, உடனே, என் உடைகளைச் சரிசெய்துகொண்டுசபைக்கு வந்தேன். பிறகு நடந்தவைதான் உனக்குத் தெரியுமே.

கதையைச் சொல்லி முடித்ததும், வடக்கு நோக்கிவந்துகொண்டிருந்த புகைவண்டியின் முன்னுல், தண்டவாளத்தில், வெகு வேகமாக ஓடிச் சென்று படுத்துக்கொண்டான் அருள். இந்த விபரீதத்தை எதிர்பார்க்காத நான், எழுவதற்குள்ளாகவே, கணத்திற்குள், அவன் மேலேறிப் போய்விட்டது வண்டி. ஒரு பயங்கரமான கூச்சல் என் காதுகளைப் பிளந்தது.

—பழையமாநகர்-பாண்டியன்

அறிவிப்பு

"ஊமையன்கோட்டை" தொடர் கதை வெளியான முதல் இதழ் கேட்டு ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த இதழ் கைவசமில்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம். தொடர் கதை இதழ் வாங்க விட்டுப்போன வாசகர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன், அந்த வாரத் தொடர் கதையைமட்டும் தனியாக வெளியிடயிருக்கிறேம். அதன் விலை 10 புதிய காசுகள். தேவையானவர்கள் அருகில் உள்ள விற்பனையாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.

—நிர்வாகி.

காலம் மாறும் கழகம் வெல்லும்!

திராவிட முன்னேற்றக் கழகம் இலட்சியத்தின் பெருமையுடன் தூத்துக்குடியில் பணியாற்றி வந்த இந்தக் காலக் கட்டத்தில் கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரம் வந்தார். "திராவிட நாட்டுப்பிரிவினை 1958ம் ஆண்டில் சாத்தியமல்ல" என்பது தூத்துக்குடியில் கல்யாணசுந்தரம் தந்துள்ள தீர்ப்பு! இந்தச் சாதாரணப் பிரச்னைக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் பட்டாளம் - அகில இந்தியப் போர்ப்படை - அமிர்தசரசிலிருந்து அம்பாசமுத்திரம்வரையிலும் எதிர்த்து நின்று பேசிக்கொள்வது ஏன்? பாகிஸ்தான் பிரிவினையைப் போற்றியும் - ஜின்னு அவர்களின் மலரடிகளுக்குப் பாராட்டுதலும் கொடுத்த கம்யூனிஸ்டு, அண்ணு-ஜின்னு அல்ல என்ருராம். அதுமட்டுமல்ல-எங்கள் இ. எம். எஸ். அறிஞரா-நீங்கள் அறிஞரா?-என்று தூத்துக்குடி உபதேர்தலுக்கு மிக மிக நெருங்கிய உறவுள்ள ஒரு கேள்வியைக் கேட்டாராம்! நாம்-கழகத்தவர் இதற்கென்ன பதில் சொல்லமுடியும்? இப்படியும்பேசக் கூடிய கல்யாணசுந்தரம் அறிஞர் அண்ணு அவர்களுக்கு அருகில் சட்ட சபையில் கம்யூனிஸ்ட்க் கட்சித் தலைவர் என்ற தகுதியுடன் அமர்ந்திருக்கிருரே - அமரமுடிகிறதே-ஓராண்டுக்கு மேல் அண்ணு அவர்களுடன் பழகியும்-அமர்ந்த பிறகும் அரசியல் சாக்கடை நடையில் பேசத் துணிகிருரே என்றுதான் வியப்புற வேண்டியுள்ளது! தோழர் ஜெயப்பிரகாசரின் சுடுமொழிகளுக்கெல்லாம் அஜாய் கோஷ் கனிவான பணிவானமொழிகளில் பதில் கடிதம் தந்துள்ள உயர்ந்த எண்ணத்தை தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளிடம் காண முடியவில்லை.

"திருவனந்தபுரத்தில் ஏற்றிவைக்கப்பட்டுள்ள சுடர் விளக்கும் செங்கொடியும் டில்லிப் பாராளு மன்றம் வரையிலும் செல்லும். திராவிடநாடு கிடைக்காமலே நன்ருக வாழமுடியும்-திராவிடத்தில் மட்டும் $1\frac{1}{2}$ லட்சம் கம்யூனிஸ்ட்கள் இருக்கிருேம், ஒரு ராஜ்யத்தை ஆளுகிருேம். நாங்கள் பிரிவினையை எதிர்க்கிருேம்"-இதையும் தோழர்கல்யாணசுந்தரம் பேசியிருக்கிருர். திராவிடப் பிரிவினை சாத்தியமில்லை என்று பேசிய மறு வினுடி-நாங்கள் எதிர்ப்போம் என்பதன் பொருள் என்ன? திராவிட நாட்டுப் பிரிவினை அமுலுக்கு வந்துவிட்டால்-அப்போதும் எதிர்ப்போம் என்பதுதானே!

"அண்ணு-ஜின்னு அல்ல. அதேபோல் திராவிடம் பாகிஸ்தான் அல்ல" என்று முழங்கும் தீர்க்கதரிசிகள்-புரட்சியின் உருவங்கள்-வடிவங்கள் $1\frac{1}{2}$ லட்சம் பேர் இருக்கிருேம் என்று எதிர்ப்பணியை-காஷ்மீர் போர் நிறுத்த எல்லையைத் தாண்டப் போகும் வீரரைப்போல்-தெரிவிப்பது ஏன்? டில்லிக்குப் போகத் துடிக்கும் உங்களுக்கு விந்தியத்துக்குக் கீழேயுள்ள இந்த விவகாரத்தில் ஏன் நீங்கள் சிக்கித் தவிக்க வேண்டும்?- கடைசியில் கதிர் அரிவாள் சின்னத்தில் முத்திரையிடுமாறு காது செவிடுபடும் படியான கரகோஷத்திற்கிடையே பேசிமுடித்தாராம் தோழர் கல்யாணசுந்தரம்!

'ஜனசக்தி' ஆசிரியர் 23-7-58ல் தூத்துக்குடி வாக்காளர்களே என்று அழைத்து "சட்ட சபையில் தி. மு. க.வினர் நீதிக்காகவும்-நியாயத்திற்காகவும் கம்யூனிஸ்டுகளைப் போல் போராடவில்லை. தி. மு. க.வின் பிரிவினை வாதம் சட்ட சபையில் எடுபடவில்லை, கம்யூனிஸ்டுகள் 14 மாதங்களில் அதிகமாகச் சாதித்துவிட்டோம்" என்று தெரிவித்து ஓட்டுப் போடுங்கள்-என்று கேட்டுக்கொண்டார்! அவர்சொல்ல மறந்த சாதனைகளை நாம் நினைவூட்ட வேண்டியுள்ளது. "வாக்காளர்களே! கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் கவர்னர் பெருமான் பிரியத்துடன் அளித்த இரண்டு விருந்துகளுக்கும் எல்லோருக்கும் முன்பாகப் போய் முதல் வரிசையில் உட்கார்ந்துகொண்டோம். இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் பாட்டாளிகளின் வரிப் பணத்தால் நடத்தப்படும் விருந்துகளுக்கு வரவேமுடியாதென்று மறுத்துவிட்டார்கள்-உங்களுக்குத் துரோகம்செய்துவிட்டார்கள். அமைச்சர் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பின்பும்கூட அண்ணுத்துரை கவர்னரின் விருந்துக்கு வரவில்லை. நாங்கள் நால்வரும் உங்கள் சார்பில் கலந்துகொண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் உலகம் போற்றும் பெருமையைக் காப்பாற்றிக்கொண்டோம். சேலம் மாக்னசைட் நிர்வாகத்தை கல்கத்தா கம்பெனிக்கு விற்கக்கூடாதென்று கடுமையாக வாதாடிவிட்டுக் கடைசியில் தமிழ்நாட்டு முதலாளிகளுக்கு குத்தகைக்கு விட வேண்டும் என்று சென்னை சர்க்காரை மன்ருடிக்

கம்யூனிஸ்டுகளுக்கு இது ஒரு கையகராதி

கேட்டுக்கொண்டோம். பாட்டாளித் தொழிலாளர்களுக்குப் பங்கு தரும்படி எங்களால் கேட்கமுடியாமல் போனுலும் அதற்காகத் தொடர்ந்து போராடுவோம்! மேலும் முக்கியமாகக் கோடை காலத்தில் சென்னை சட்ட சபைக் கூட்டங்களை உதகையில் நடத்தவேண்டும் என்ற சர்க்காரின் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். ஆனுல் அண்ணுத்துரையும் மற்றவர்களும் உதகையில் நடத்த சம்மதிக்கவில்லை. பொதுமக்களின் பணத்தைக் கொண்டு போய் உதகையில் ஊதாரிச் செலவு செய்ய ஒத்துக்கொள்ள முடியாது என்று மக்களுக்கு எதிராக வெளிப்படையாகவே பேசினுர்கள். உதகையில் வெப்பமில்லாமல் அமர்ந்து பேசினுல்தானே உங்களுக்காக உயர்ந்த திட்டங்களைத் தீட்டமுடியும். கம்யூனிஸ்டுகள் இதில் கடமை தவறவில்லை. காங்கிரஸ்காரர்களைப் போலவே பெட்டி படுக்கைகளுடன் உதகைக்குப் போக நாங்கள் நால்வரும் தயாராக இருந்தோம். ஆனுல் இந்தப் பிரிவினை வாதிகள் எங்கள் உல்லாசத்தைக் கெடுத்துவிட்டார்கள்-மக்கள் நலன் பேசி மயக்கிவிட்டார்கள். கழகத்தார் ஒத்துக்கொள்ளாததால்தான் சர்க்காரும் சம்மதிக்கவில்லை. இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து எங்களுக்கே வேட்டுப் போடுங்கள். இல்லையில்லை-ஓட்டுப் போடுங்கள் இப்படிக்கு—'நால்வர்!'-கம்யூனிஸ்டுகள் இந்த வாக்குமூலத்தையும் தூத்துக்குடியிலே சொல்லியிருந்தால் நிச்சயம் நால்வர் ஐவராகியிருப்பார்-நல்ல வாய்ப்பை நழுவ விட்டார்கள்!

தூத்துக்குடி இடைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு-"கம்யூனிஸ்டுக் கட்சியின் தோல்விக்குக் கழகத்தின் போட்டிதான் காரணம்-பிரிவினை கோஷத்தை மக்கள் ஆதரிக்கவில்லை. திருவாடானையைப்போலவே தூத்துக்குடியிலும் பாழ்படுத்திவிட்டார்கள்" என்று ஜனசக்தி ஆசிரியர்கள் இருவர் மதிப்பிட்டிருக்கிருர்கள். தேர்தல் பிரச்சாரம் துவங்கிய நாளிலிருந்து 24-ந்தேதி இரவுவரை 'பிரிவினை'யை எதிர்த்துப் பேசினுர்கள். தங்கள் கட்சியின் கொள்கைகளைச் சொல்லவில்லை-தன்னந் தனியாகப் போட்டியிட்ட கழகத்தை எல்லா வகையிலும் முறியடிக்க முயற்சி செய்தார்கள் - ஆனுல் தோற்ருர்கள்!

எட்டுக் கட்சிகளின் ஏகோபித்த எதிர்ப்புகளைச் சமாளித்து திராவிட முன்னேற்றக் கழகம் தன் பிரிவினைக் கொள்கைக்கு வளம் தேடியிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் கருதுவதுபோல கொள்கையின் தோல்வியல்ல. எதிர்க்கட்சிகளின் மூலபலம் அத்தனையும் சேர்த்து 14000 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டதைத் தடுக்க முடியவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியின் 17,000 வாக்குகளை ஆறு கட்சிகளின் விதம் வகுத்துப் பகுத்துப் பார்த்தால் கம்யூனிஸ்டுக் கட்சியின் பங்குத் தொகை ஏறத்தாழ 2800 வாக்குகள்தான்! கம்யூனிஸ்ட் அபேட்சகரின் டிபாசிட் துகைத் திரும்பி வந்திருக்குமா-கம்யூனிஸ்ட் கட்சியின் மான உணர்வுதான் மீண்டிருக்குமா? கம்யூனிஸ்டுகளின் கணக்கை - அதிக வாக்குகள் பெற்றுக்கொண்டுள்ள கம்யூனிஸ்டுகளின் லட்சணத்தை - கம்யூனிசத் தத்துவங்களின் வெற்றியென்று சொல்லத் துணிவுண்டா? "அண்ணு முதல் ஆசைத்தம்பி வரை" பேசியது உண்மைதான். எடுத்துச்சொல்கின்ற ஏமாளிக் கட்சியினர் எவருமே தூத்துக்குடியில் பேசவில்லையா? பட்டியலைக் கூறட்டுமா? அகில இந்தியத்தலைவர் பி. டி. ரணதிவே, பட்டம் தாணு வைத்தோற்கடித்த ஈஸ்வர அய்யர்-எம். என். கோவிந்த நாயர்-தேவிகுளம் ஸ்டார் ரோசம்மா-கோவைக் கோகிலம் பார்வதி-மாஜி பொலிட் பிரோ ராமமூர்த்தி - கல்யாணசுந்தரம் - ஜீவானந்தம் - வெங்கட்ராமன்-மதனகோபால், சங்கரய்யா-மாயாண்டி பாரதி - ஏ. எஸ். கே. அய்யங்கார் - இவர்கள் எல்லாம் முழக்கித் தீர்த்த பிறகுதான் - ஜனநாயகக் காங்கிரஸ்காரர்கள் - தமிழரசுக்கழகத் தலைவர்-பிரஜாசோசலிஸ்டுகள், 'பார்வர்டுபிளக்' என்பவர்கள் எல்லோரும் சேர்ந்து பேசிய பேச்சுக்களின் எதிரொலிகள் இன்னும் தூத்துக்குடியில் கேட்கின்றதே! பிரஜா-சோசலிஸ்டுகள் கேரளத்தில் சங்கரன் சர்க்காரைத் தினமும் உதைத்துக்கொண்டிருக்கிருர்கள்-ஆனுல் கேவலம் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் அந்த உதைக்கும் கால்களைத்தான் தூத்துக்குடியில் முத்தமிட்டார்கள்! கொள்கையைச் சொல்லி ஓட்டு வாங்கியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்ருல்-கம்யூனிஸ்ட்கட்சிக் கொள்கையும் - ஜனநாயகக் காங்கிரஸ் கொள்கையும் ஒன்ரு? அல்லது தமிழரசுக் கழகத்தின் கொள்கையுடன் ஒத்திருக்கிறதா? முன்னேற்றக் கட்சிக்கும்-அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எந்தக் கொள்கை உடன்பாடு-எந்தக் கட்சியினராவது சொல்லத் தயாராக இருக்கிருர்களா? ஜூலை 25-ந் தேதி ஆதரித்த பிரஜா-சோசலிஸ்டுகள் மதுரையில் ஆகஸ்ட் 2-ந் தேதி கம்யூனிஸ்டுகளை எதிர்த்து அடக்குமுறை தினம் நடத்துகிருர்களே! இந்த இருவரில் இரவல் கொள்கை யாருக்கு?

திராவிட முன்னேற்றக் கழகம் சென்ற பொதுத் தேர்தலில் பதினேழு லட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. அவைகள் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டவைகள் என்று எடுத்துக் காட்டியதை எந்த ஏமாளியும் ஏற்றுக்கொள்ளவில்லை? ஆனுல் தூத்துக்குடி இடைத்தேர்தலில் கழகத்துக்குக் குறைந்த ஓட்டுகளும் கம்யூனிஸ்டு பெற்றுள்ள அதிகப்படியான வாக்குகளும்-திராவிடப் பிரிவினைக்கு எதிராகத் தரப்பட்டுள்ள வாக்குகளாம்! கம்யூனிஸ்டுகள் சொல்லும் படிப்பினைகள்-இடத்துக்கு ஏற்ருர்போல் மாறத்தான் வேண்டுமா? பொதுத்தேர்தலின்போது மதுரை மாவட்டம் உத்தமபாளையம் தொகுதியில் - காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் - தமிழரசுக் கழகம்-மூன்றும் சேர்ந்துதான் கழக ஆதரவாளர் பி. டி. ராசன் அவர்களை எதிர்த்தன! அன்றைக்குக் காங்கிரஸ் பிற்போக்குச் சக்தி வெற்றிபெற இந்த இரண்டு கர்மவீரர்களும் கழகத்தைக் காட்டிக் கொடுக்கவில்லையா? 1952-பொதுத்தேர்தலில் ரோச் விக்டோரியா - கே. வி. கே. சாமி - ஐசக்-போட்டியில் - காங்கிரசின் பிற்போக்கு வெற்றிபெற பேருதவி செய்தது கம்யூனிஸ்டுகள் தானே? சேலத்தில், நெடுஞ்செழியன்-மாரியப்பன் - சாமுவேல் - போட்டியில்-காங்கிரசின் ஆதிக்கத்திற்குப் பலியானது யார் - கம்யூனிஸ்டுகள் தானே? திருவாடானையும்-தூத்துக்குடியும் - கழகத்தின் கண்ணியத்திற்கு எந்த வகையிலும் இழுக்கைத் தருவனவல்ல! 17000 ஆயிரம் ஓட்டுக்கள் கம்யூனிஸ்டுகள் தமிழ்நாட்டில் செய்துள்ள நற்பணிகளுக்காகத்தான் என்று ஜனசக்திப் படையினரால் கூறமுடிகிறதா? "14 மாத கேரள கம்யூனிஸ்ட் ஆட்சியின் சாதனைகளுக்கு அளிக்கப்பட்ட ஓட்! தமிழகமும் கேரள வழியில் செல்ல வேண்டும் என்பதற்காக அளிக்கப்பட்ட ஓட்"-இப்படித்தானே தமிழ்நாட்டுக்கம்யூனிஸ்டுகள் தெரிவிக்க முடிகிறது! கழகம் இன்று சொல்வதை என்றும் சொல்லும் - இறுதியில் வென்றே காட்டும்!

—கூடலரசன்

வெண்பாப் போட்டி

24. கோவலர்வாய் வைத்த குழல்.

குறுநகைதான் சிந்தி குதலைவாய் கூட்டப்
பெறுகின்ற இன்பம் பெரிதே—சிறுமதலை
பூவிதழால் சொல்லும் புதுமழலைக் கொப்பாமோ
கோவலர்வாய் வைத்த குழல்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

❁

நாவா லுரைக்காமல் நாணத்தால் என்னோடு
தூவிழியால் பேசித் துணைகொண்டாய் — ஆவியே!
பூவிதழால் நீ காட்டும் புன்சிரிப்புக் கிடாமோ
கோவலர்வாய் வைத்த குழல்.

—"முத்தூரான்", பொள்ளாச்சி.

❁

தண்மதியும் பால்தெளிக்க, தேன்தமிழ் தீஞ்சுவையோ
பண்ணிற் பிசைந்தொழுக; காற்சலங்கைப்—பெண்ணழகி
தாவிச் சதிர்ஆடத் தக்கதடா இன்தமிழா
கோவலர்வாய் வைத்த குழல்.

—தென்றல் ராமலிங்கம், சென்னை-6.

❁

இன்னிசை நல்குதலால் இன்னல் தவிர்ப்பதனால்
மன்னிய மாக்கள் மதிப்பதுவால்—வென்றிகொள்
காவலர் கைக்கொள்ளும் செங்கோல் தனக்குநிகர்
கோவலர்வாய் வைத்த குழல்.

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

❁

இருட்டுமனங் கொண்டோர், இனக்கேடு செய்வோர்,
குருட்டுக் குணத்தோர், கொலைஞர்—மருட்டுகின்ற
தீவளர்க்கும் பேயரெலாம் சிந்திக்க வைத்திடுமே
கோவலர்வாய் வைத்த குழல்.

—போடி. மீராமன்னன், மீனாட்சிபுரம்.

❁

அப்பப்பா! அம்மம்மா! அத்தத்தா! என்றினிதே
பாப்பா உதிர்க்கும் மழலைக்கு—ஒப்பாமோ!
பாவலர்வாய் இன்கவிதை! பாணர்கை மேவும்யாழ்!
கோவலர்வாய் வைத்த குழல்.

—கண்ணரசு, கோவை.

❁

தென்புதுவைப் பொன்கவிஞர் தேனூறும் பாட்டமுதில்
கன்னி உதட்டுக் கனிதோற்கும்; —தன்நடையில்
காவிரியும் நாணும்; களியிசையில் கோணுமே
கோவலர்வாய் வைத்த குழல்.

—சிற்பி, ஆத்துப்பொள்ளாச்சி.

❁

களிப்பைப் பெருக்கும்; கவலை மறைக்கும்;
தளர்வைக் குறைக்கும், தமிழில்—மலர்கின்ற
மேவுபுகழ் நல்லிசையால் மேன்மையுறும் என்னருமைக்
கோவலர்வாய் வைத்த குழல்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

❁

தன்னுரிமை கோரித் தவங்கிடக்கும் செந்தமிழர்
முன்னிலையில் நின்று முழக்கமிடும்—என்னருமை
நாவலரின் நற்றமிழும் நம்அண்ணா சொற்சுவையும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—ந. அலி, துறையூர்.

❁

காதல் இசைபொழியும்; கன்னியிள மானூர்க்கு
தூதுவிட்டு நெஞ்சத் துடிப்புணர்த்தும்—வேதனையை
பாவை மறந்துவக்கப் பண்ணெழுப்பிக் கொண்டிருக்கும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—குகன்குருசாமி, கமுதி.

❁

நாவலர்வாய்ச் சொற்கள் நவின்றிடுமே நற்கருத்தை
பாவலர்செய் பாக்களெலாம் பால்மணக்கும்-காவொக்கும்!
மேவிடுநல் லின்னிசை வெள்ளம் பொழிந்திடுமே
கோவலர்வாய் வைத்த குழல்.

—முதுரைப்பித்தன், சென்னை-12.

❁

தேர்வலவ! நீயும் செலுத்து மிகவிரைவாய்,
பார்த்துப்பார்த் தென்வழியைப் பாவைக்குப்-பூத்தனகண்;
ஆவல் கெட அன்னாள் ஆங்கழுதல் காட்டுமே
கோவலர்வாய் வைத்த குழல்.

—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்.

❁

பாயும் புலியும் பழுதுபுரி வெங்கரியும்
காயும் கனலும் கடு அரவும்-நோய்கொள்
மேவும் வலியும் மிளிர்பகையும் நீக்கிடுமே
கோவலர்வாய் வைத்த குழல்.

—பசுமலை வீர. முருகேசன், மதுரை.

❁

ஆட்டினையும் மாட்டினையும் அங்கண் மடவார்தம்
பாட்டினையும் வென்றடக்கும் பண்பொழிந்து—நாட்டினிலே
மேவிவரும் முன்னேற்றப் பண்ணிசைத்தே ஏற்றமுறும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—சிந்தாமணி, கருப்பட்டிபாளையம்.

❁

காடுதனில் மேய்ந்திடுமவ் வாவினமும், புள்ளினத்தில்
பேடுகளும், குஞ்சுகளும், வீரமிக-வேடுவரும்,
யாவருமே மெய்மறக்கச் செய்திடுமாம், சீருடைய
கோவலர்வாய் வைத்த குழல்.

—விருத்தாசலம் இராஜேந்திரன்.

❁

ஆட்சிக் கொலுவிருந்தே ஆற்றலெதும் இல்லாமல்
காட்சிப் பொருளாகக் காங்கிரசு-நீட்சியுறும்
நாவலிமை இன்றெனினும் நாடு'கதர்'க் கன்னவர்சொல்
கோவலர்வாய் வைத்த குழல்.

—சி. எம். முத்து, கரந்தை.

❁

தொட்டால் துவண்டுவிழும்; தோள்தழுவி இன்பமுறும்;
வட்டநிலா போல்முகத்தில் வண்டாடும்;-கட்டழகுப்
பாவையரின் வாய்பிறக்கும் பாகுமொழிக் கிடாமோ
கோவலர்வாய் வைத்த குழல்!

—எழிலூரான், சுந்தராபுரம்.

❁

சிந்தை மகிழ்விக்கும்; சிங்காரப் பண்ணிசைக்கும்;
விந்தை பலபுரியும் வெண்ணிலவில்;-இன்னமுதாம்
காதற் கனியுண்ணக் கட்டழகே! வாவென்கும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—க. இன்பவல்லி, சுந்தராபுரம்.

❁

கொல்லும் விலங்கினத்தைக் கூடடையும் புள்ளினத்தை
எல்லா வுயிர்களையும் ஈர்த்துவிடும்-உள்ளமதில்
பாய்ந்துவரும் தென்றலுடன் பண்ணிசைக்கும் எந்நாளும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—முசுமன், கோவை.

❁

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றுரைத்து
நீதி நிமிர்ந்திருக்க நித்திலத்தே-வாதிட்ட
பாவலரின் பாட்டுதனைப் பாரறியச் செய்திடுமா
கோவலர்வாய் வைத்த குழல்.

—செய்கை-எ. கலையன்பன், திருவையாறு.

எங்கும் விற்பனையாகிறது!
முல்லை
(ஆகஸ்ட் இதழ்)
விலை அணா எட்டு.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: ஏ. சங்குபிள்ளை, 113, தீண்டுக்கல் ரோடு, மதுரை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு